அருணகிரிநாத சுவாமிகள் புராணம்

உ

முருகக்கடவுளினை
கௌமாரசமையாசாரியர்களிலொருவராகிய

அருணகிரிநாதசுவாமிகள்
புராணம்.

இஃது
முருகதாசசுவாமிகளென்றும்
திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்
விளங்குகின்ற
தண்டபாணிசுவாமிகள்
அருளிச்செய்தது

கழுகுமலையிலிருக்கும்
வெங்கடாசலஞ்செட்டியாரும்,
சங்கரபாண்டியவுபாத்தியாயரும்
கேட்டுக்கொண்டபடி
திருநெல்வேலி
முத்தமிழாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
ரிஜிஸ்த்தர் செய்யப்பட்டிருக்கின்றது.
பிரமோதூத௵ தை௴

இவ்வச்சுக்கூடத்து
சண்ட்டிருக்ட்டரவர்கள்
மாசித்தாசில
ஜீவனருயரவர்கள் அன்கோ.

உ

முருகக்கடவுடுணை.

அருணகிரிநாதசுவாமிகள்

புராணம்.

பொதுப்பாயிரம்.

விநாயகர்துதி.

வேதநான்கும்விளங்கவிளக்கிய *
மாதவன்சொல்வணாந்தவன்றாள்பணிந் *
தேதமின்றியிலங்கருணைக்கணோர் *
நாதன்வந்தநலஞ்சொலநண்ணுவாம். (க)

முருகர்துதி.

ஆறுதிசையேமுகமாய்ச்சமயங்களீராறேயடற்றோ
ளாகி, வீறுபரஞ்சிவமெனச்சொல் விருநூலின்பொரு
ண்முடிவேவியன்றாளாகி, யீறுமுதனடுவின்றியிலங்கு
குகப்பெருமானேயெனை நீயன்பாற், கூறுகெனச்சொ
ன்னபடிபின்னருணகிரிசரிதங்குலவச்செய்யே. (உ)

ஆறுசமயத்துக்கடவுளர் துதி.

ஆதவன்சிவனம்பிகைமுரகரியாகு *
மீதமர்ந்தவன்குகனெனுமறுவரைவிழைவாங் *
கோதகன்றதென்னருணையின்கோபுரத்துய்ந்த *
போதகன்றிருச்சரிதமெய்ப்பொருடரும்பொருட்டே. *

சரசுவதிதுதி.

பூமிசையிருந்தபோதன்புனிதநாவகத்தில்வாழு *
மாமியேயுனக்குநூறுவந்தனம்வடிவேல்கொண்ட *
சாமியாந்தந்தைமாற்றந்தவறிடாதுரைக்கவுற்ற *
தாமிதிற்பிழைவாராமலருள்வதுன்கடன்கண்டாயே (௪)

அடியார் துதி.

இளங்கரும்பைமுலைப்பரவைகணவன்முன்னாளெடுத்தியம்புமெய்யடியாரெழிற்றாள்போற்றிக், களங்கமில்சீர்க்கவுமாரத்தொகையினாயேன் கழறியவர் தம்மையெல்லாங்கருதிப் போற்றி, யுளங்கனிந்தமாதவத்தாற் பிறவாவீட்டினுற்றவர்களனைவரையுமொருங்குபோற்றி, விளங்குபுகழருணகிரிநாதனானான் மெய்ச்சரிதஞ் சிறிதுரைக்கவிரும்பினேனே. (௫)

பொதுத்தெய்வத்துதி.

கருகல்வெளிறிடலாதியாமெண்ணில்கோதுங்களைந்தென்றனைக், கருணைகிரிநாதன்புகழ்க்காதை நவில்பாடலருள்செய்யுமா, லொருமையொடுபன்மைக்குநடுவாகியுறவாகி [illegible] பேர்கொன்றுணர்,வருமமின்மனந்தோறுநினைகின்றவ [illegible] ணத்தில்வளர்தெய்வமே. (௬)

பொதுப்பாயிரமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

சிறப்புப்பாயிரம்.

விநாயகர் துதி.

ஆகமங்கள்சொன்னாருணைச்சிகரியிற்றென் *
பாகமுறுமானைமுகப்பண்ணவனையெண்ணலுற்றாங் *
கோகனகவேதனழக்குட்டியவன்கைக்கிளியின் [றே.
மாகதையைச்செந்தமிழால்வாழ்த்துநலம்வாய்க்கவென்

முருகர் துதி.

திருவருணைவல்லாளன்கோபுரத்தின்வடவருகிற்றிகழுஞ்சேயைக், குருதிவடிவேற்படையைக்குலமயிலைச்செஞ்சேவற்கொடியைக்கும்பிட், டருள்பொழிகட்குஞ்சரியைக்குறமகளைமிசப்போற்றியணியார்கிள்ளை, யுருவெடுத்துந்தமிழ்பாடுமொருபுலவன்புகழுரைத்தற்குன்னினேனே. (௨)

ஏழிளையனார்க்கும்பொதுத்துதி.

தென்னருணைச்சிகரியினிலொருகற்றூணிற்றிகழும் வடவீதியிலோர் சிறியகுன்றிற், றன்னதெனவாகமஞ் சொல்வட்டமேற்றிக்கிற் றனதடியாரெனும்பெயரோசாதிப் பேரா, மன்னவர்தங்தெருவின்மற்றுஞ்சொல்வார்சொல் லுமவ்விடத்தி லேழுருக்கொண் டாடும்வேளை, யின்ன லொழித்தெளிதாளு மிளையோன்றன்னை யிறைஞ்சுகின் றேனவன்கிளிச்சீரியங்கவென்றே. (௩)

அண்ணாமலையார்துதி.

மாலோட்டயனிகலுந்தினமலையாய்நடுநின்ற *
மேலோனைவணங்கித்துதிமிகவும்பகர்வேமால் *
வேலோனதுகிளியின்புகழ்விண்ணோருணர்வதுபோற் *
பூலோகருமறியும்படிபுகலப்பெறுமாறே. (௪)

உண்ணாமுலையம்மன்றுதி.

வார்செவிக்குழையாய்வளையணிபெருமான்மகிழுமு ண்ணாமுலைமாதின், சீர்செறிந்தலர்ந்தகமலமென் மலர் போற்றிகழ்பதஞ்சென்னியிற்சேர்ப்பாம், போர்செயும வுணர்குலமறக் கறுவிப் புலவனைப் புரந்தவேற்புனித, ேனோர் செழுங்கரத்திற் கிளியுருவாகி யுற்றந்தவன்சரித முற்றுறவே. (௫)

வீரவாகுமூர்த்திதுதி.

விற்கொண்டுசரமாரிபொழிமேகமெனநிற்கும் விறல் வீரவா, கற்கொண்டதிருமேனிதனைநாடியவனன்பரட ல்கூறுவாம், பொற்கொண்டுசெயுமாடமலிவீதியருணா புரிக்கோபுரத்,திற்கொண்டுவளர்வேலனணிகிள்ளையெ னுமன்பனிசைநீடவே. (௬)

அகத்தியமகாமுனிவர்துதி.

தெருளும்பெரியோர்புகழ்தென்பொதியை *
மருவுங்குறுமாமுனியைப்பணிவாம் *
பொருமங்கசவேள்கிளிபுண்படவேன் *
முருகன்கிளிவண்மைமொழிந்திடவே. (௭)

அருணகிரிநாதர்துதி.

உன்சரிதந்தனைப்பலவா றுலகத்தார்பகர்வதுகேட்டுளெம் பொருமன், முன்சரிதந்தனைக்கூட்டிச்சொலப்புகுந்தே னவையாவுமுறைபிறழ்ந்தா, லென்சரிதங்கருதியெண் ணுக்களவுமனநாணுகிலாவெனைத்தள்ளாதே,பொன்சரி தங்கியகரத்தார்க்கொருமதனுமருணகிரிப்புலவரோறே)

உண்மை.

முக்காலத்துறுசெயலு மறிந்துவப்போனல்லேன்மு ருகோனைமயிற்பரியின்முன்வரக்கண்டில்லேன், மைக்

காலனிசர்விழியார் மயலொழிந்தோர்வேடம் வஞ்சகத்தாற்றரித்துலகின்மனோதோறும்புகுதவே, னக்காலத்தருணகிரிநாதனாட்சரிதமபிந்தவன்போற்பிதற்றுவதற்காசைகொடுதுணிந்தே, னெக்காலத்தெச்செயலுமிறைவனதேயென்னு மியல்புடையாரல்லாதாரிகழ்வதுநிச்சயமே.

(௯)

அவனசையாவிடிலணுவுமசையாதென்றிடலு மயில்வேளென்னெடுசிலநமறியவுரைத்ததுவுஞ், சிவனையதமிழ்முனிநூலையாண்டுசென்றுசெப்புமனாக்கவியெனினுந்தெய்வச்சார்பெனலுங்,கவனமுற்றுங்கலைவாணிதொழிலெனவேபல்லோர் கழறுதலும் பொய்யாகிற்கடல்சூழுலகத், தெவனருணகிரிநாதன்சரிதமதைக்கேட்டெங்கெவ்வாறுசொல்லிடினுமெனக்கதுசம்மதமே. *

பிறந்தவுடன்றுதைபின்போய்க் கபிலைவரைகண்டுபிறைசூடிதனைப்பணிந்துபின்னடக்கும்வண்ணஞ், சிறந்தகதைகணபதிதன் கரத்துறுகோடதனாற் செம்பொன்மலைமீதெழுதச்செப்பியமாமுனிவன், றிறந்தழைக்கும்பனுவலையுமிகழ்வாருஞ்சில்லோர்திரிதருமிப்பூதலத்திற்சிறிதேனுநாணு, தறந்தவிராவருணைநகர்க்கிளிப்புலவன்காதையடியனேன்சொலத்துணிந்ததாச்சரியத்துயர்வே.

(௰௧)

எத்திசையும்புகழருணைச்சிகரிவடவருகிலெழில்வேலுஞ்சிகிப்பரியுமிலங்கவிளையாடு, முத்திமுதலாமுருகக்கடவுளைக்கைதொழுது முன்னாளிலருணகிரிமுனிவனெனும்புலவன், சித்தியடைந்தமைமுழுதுந்தெரிந்துரைக்கத்தக்க திறம்போதாமையிற்றமியேன்சிறிதொருவாறுரைப்பேன், பத்தியிலானென்றிகழ்வார்தவம்புரியச்செய்வார்பரவுவாரிறுமாந்துபழுதறச்செய்வாரே. *

வரலாறு.

அறிவாயபொருணனவிற்கனவிற்றனேயறிவிக்குமவைகொஞ்சமவையவங்கள், செறிவானகுருச்சொல்லல்கொஞ்சமேலோர்தெரித்தல்கொஞ்சமுலகத்தார்செப்பல்கொஞ்ச, நெறியோடுகலந்தருணகிரிநாதன்சீர்நிறைந்துளகாவியம்பகர்வேனேமிக்காவின், மறியேந்தியெனவாழுஞ்சூகன்சொல்ல மாமுனிவர்கேட்டதென்றுன்மனமொப்பாதே.

(௰௨)

எண்ணில்பலகோடிதொண்டர்முருகவேளையிறைஞ்சிநிற்கவருணகிரியென்னுநற்பேர்த், திண்ணியன்றனைத்தனைபேறடைந்தஞாயந்திகழும்வண்ணமவனுயிரிற்சேர்ந்தபூர்வ, புண்ணியத்திற்சற்றறிந்த மட்டுஞ்சொல்வேன்புறக்கருவியுட்கருவிப்பொருத்தமியாவு, நண்ணியசைப்பவனுணர்த்தாவிதத்தைக்கேட்டானுனறியேனென்பதற்குநாணிடேனே.

(௰௩)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

சாத்துகவிகள்.

திருநெல்வேலிப்புதுத்தெரு.

மகராஜராஜஸ்ரீ

தச்சனல்லூர்வன்னியப்பபிள்ளையவர்கள்

குமாரர்

அழகியசொக்கநாதபிள்ளையவர்கள்

இயற்றியது.

மருமலிதிருநெல்வேலிவடக்கனவரததானத், தெருவ
ளர்தண்டபாணி திருப்புகழ்க்காரன்செஞ்சொன்,முரு
கதாசனுமாமென்னமுப்பெயர்தரித்தமேலோன், பெரு
மைதானளவிட்டென்னாற்பேசருந்தகைமைத்தம்மா.(௧)

மந்தமாருதவனைமுனிவரன்றமிழ்வளரச் *
சந்தமாமழைபொழிமுகிலருணையந்தலத்தில் *
வந்தமாதவன்சரித்திரம்விரித்தனன்மாயைப் *
பந்தமாசறுதண்டபாணிப்பெயர்படைத்தோன். (௨)

அடிக்குமுன்னோர்விதிக்குமின்சொற்சுவைக்குமொரு
குறைவுவாராதமைத்தோர்பாட்டு,முடிக்குமுன்னந்தாய்
கொடுத்தசேனையெல்லாம்வாங்குதையோமுதிரக்கல்வி
படிக்குமுன்னேதொடுத்தடுத்துக்கேட்போர்கள்பிரமிக்
கும்படிக்குமொவ்வோர், நொடிக்குமுன்னற்கினியகவி
முருகதாசனைப்போலநுவல்வாரியாரோ. (௫)

ஓதையிற்பணிலமணிதிகழ்பழனஞ் சிறந்ததென்னரு
ணையிற்செப்பு,மோதைசால்பழையதிருப்புகழ்க்காரனா
யருட்குமரனாலுய்ந்த, காதையைப்புதியதிருப்புகழ்க்
காரன்கழறிய வுண்மையைக்காண்போர், தாதையாஞ்
செந்தினாயகன்பெருமைதனைநினைந்துருகனிச்சயமே.

குழிப்பு.

தனன தன தான தந்த தனதான

அருணையுயர்கோபுரங்கொ
ணிலைபின்வடபால்விளங்கு   கிளியாமோ
மமலனிசைபாடியுய்ந்த,
ரருணகிரிநாதர்முந்து
கதையைபுலகோரறிந்த   படிபேசா
வளவிலவர்வாயில்வந்த,

திருளறவமாதவன்ற
னரியவிளையாடலின்ப
மிலகியபுராணமொன்றை, யெளிதாயே
யெவருமுணர்வாறொருங்கு
கடலின்மடைவாய்திறந்த
தெனவுரைசெய்தான்முதிர்ந்த, தமிழாலே
திருமலையிலேறியன்பு
மிகுமுறுதியாலுருண்டு
சிறிதுமுடலூனமின்றி; யெழுவோன்வேள்
செயுமடலினல்வருந்தும்
வினைமுழுதுமாறவென்ற
திறமையினன்வேயடர்ந்த, வனமூடே
மருளறும்விபூதியென்ற
பொடியணிதுலாவவென்றி
மருவுகவுமாரமென்ற, மதமோடே
வருமுருகதாசனென்ற
களிறுபலகோடிதொண்டர்
மகிழ்திருநெல்வேலிவந்த, பெரியோனே. (௫)

௨

இஃது

திருநெல்வேலி

வடக்கனவரததானவிநாயகர்கோவிற்றெரு

மகராஜராஜஸ்ரீ

செந்திநாயகம்பிள்ளையவர்கள்

குமாரரும்,

இந்நூலாசிரியரதுமாணாக்கர்களிலொருவருமாகிய

சித்திரபுத்திரபிள்ளையவர்கள்

இயற்றியது.

கந்தவேள்புயபத்திற்சந்தக் கவிமிகப்புனைந்தோன்றன்
சீ,ரிந்தவாறுமென்றிபாருமெளிதினிற்றெளிதல்வேண்
டி, யந்தமெய்ச்சரிதந்தன்னை யருந்தமிழ்க்கவியிற்சொ
ன்னான், சந்தனப்பொழில்சூழ்நெல்லைத்தண்டபாணிய
னென்போனே. (௧)

அருணையம்பதிவந்துதித்தமாதவன்றனருள்விளையா
டல்களனைத்தும், பொருணயம்பெறுசீர்த்தமிழ்க்கவிப
தனாற்புகன்றெமதுளத்தினிற்பொருத்தி, யிருணையப்பு
ரிந்தமுருகதாசனைவேலேந்தியகுருபரங்கிளரிய, கரு
ணையங்கடலையறுதினந்துதித்துக்கரங்குவித்திருப்பதெ
ன்கடனே. (௨)

நீடியசீர்த்திருவருணைச்சிகரிவாயி னிலக்குவடபுறத்தினிற்குநிமலவேளைப், பாடியபைங்கிளிப்புலவன்சரிதந்தன்னைப்பலவாறிவ்வுலகத்தார்பகராவண்ண, நாடியருண்மலிமுருகதாசனென்னா நலங்குலவுதிருப்புகழோனவின்றானன்பாற், றேடியமெய்க்கவுமாரர்பலருங்கேட்டுச்சிரமசைத்துக்களிகூர்ந்துசிறப்புற்றாரோ. (௫)

குழிப்பு.

தனனதனதானந்தனதனத்தானதய்யானா

கயிலையிறையாளுங்கழைவனத்தூரினல்லோர்சூழ்களிமருவுசீலன்றமிழ்வனப்பாரும்வல்வாயான், வெயிலவனைநேரும்புகழுடைத்தூயன்மெய்கோடா விறன்முருகதாசன்றிருவருட்சீராயெள்ளாதா, னெயிலினிடைவாழுந்தகுவளைப்போரில்வெல்சீரா லிமையவர்கள்பேணும்பெருமைபெற்றியாதுமொவ்வாதா, மயிலணியுமார்பன்கழல்விருப்பாளர்சொல்லாலே யருணகிரிநாதன்கதையினைப்பாடல்செய்தானே. (௪)

௨

திருநெல்வேலி

ஒளிமுத்துத்தொண்டமான்

குமாரரும்,

இந்நூலாசிரியரது மாணாக்கர்களிலொருவருமாகிய

அருணாசலத்தொண்டமான்

இயற்றியது.

ஆண்டிமையோர்க்கருள்புரிந்தகுமரகுருபரக்கடவுட்கடிமைத்தன்மை, பூண்டினியதமிழ்ச்சந்தக்கவிபொழியுமருணகிரிப் புலவன்காதை, வேண்டியவாறுலகுணாக்கும்பொய்மைதவிர்ந்திடமெய்மை விளங்கவெங்கள், பாண்டிநன்னாட்டுறுநெல்லைப் பதிமுருகதாசனன்பிற்பகர்ந்திட்டானே. (௧)

கந்தனேபரமென்றுணர்ந்ததாலவன்பொற்கழல்களையநுதினந்துதித்த, செந்தமிழ்ச்சந்தப்பைங்கிளிப்புலவன்றிருச்சரித்திரந்தனைத்தெரித்தான், மந்தமாருதம்வந்துலவியநெல்லைமாநகரிடத்தயிற்படையைச், சந்ததம்போற்றியருள்பெறுமுருகதாசனா மாசிலாதவனே. (௨)

பொங்கரவ மணிந்தபிரா னருணைநகர்ச்சிகரிப்புக ழோங்கத்தமிழ்க்கவிதை பொழிந்தவன்றன் கதைபை யைங்கரத்தோன்றனக்கிளையகுமரகுருபரவேளநுக்கிர கப்படியுரைத்தென்மனக்கவலைதவிர்த்தான், பங்கமில்சீ ரருள்வடிவுமுழுதணிந்தநீறும்பவளநிறத்தானை யொன் றும்பழுதறுகண்டிகையு, மெங்கணுமெச்சியதிறல்வா ய்ந்திலங்குதண்டபாணியென்னுமொரு திருப்பெயரு மிசைந்துடையோன்றானே. (௯)

குழிப்பு.

தனன தனதன தய்யத் தனதன தத்தன தந்தனறு.

படியிலுயர்திருநெல்லைப்பதிவருபத்தர்தினம்பகர்சீர் பழகுமனதினுய்வைத்தருதவ முற்றுமுணர்ந்தருள் வோன், மிடியினிடைபடுமல்லற் பிணியையறுத்தெறி யுந்திறல்சேர் விரதனதிநயமல்கிக் குலவுதிருப்புகழும் பொழிவோன், முடிவில்சமரசவெள்ளக்கருணைவனப்ப விர்பண்பினரா முனிவரதிபதிவைகத்தகு பொதியைத் தமிழின்கவியா, லடிமைகொளுமுருகையற் குரிமைமி கப்பெறுபைங்கிளியா மருணகிரிமுனிமெய்மைச்சரித முரைக்கவறிந்தனமே. (௧௦)

சாத்துகவிகள், முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

அருணகிரிநாதசுவாமிகள் புராணம்.

பூர்வபுண்ணியச்சருக்கம்.

தமிழ்மணங்கமழ்தென்றலுஞ்சந்தனக்காவு *
மமிழ்தைநேர்சுவைப்பொருநையாதியநதியாறு *
மிமிழ்வருதவெள்ளருவியின்கூட்டமுமேமச் *
சிமிழ்குலாவியமுலையரமகளிர்தஞ்செறிவும். (௧)

சித்தர்தங்கணங்குகைதொறுநிலவியசிறப்புஞ் *
சத்தமேகமுமடைகிடந்தறல்பொழிதகையுஞ் *
சுத்தநான்மறைநெறிகொள்வாரறுவர்சொற்றுதியும் *
புத்தராதியர்நினைதொறுநடுக்குறும்புகழும். (௨)

வெருவிவானரக்குலத்துடல்விதிர்ப்புறப்பிளிறுங் *
கருவியானையின்மதமலர்கனியிறுல்கலுழ்தேன் *
மருவியோடிடுமோடையுமாதியவளத்தாற் *
பொருவிலாநலங்கொடுதிகழ்சுந்தரப்பொதியை. (௩)

கல்லின்மேன்மலர்கமலநாண்மலர்த்திரள்கண்ணாய் *
வல்லிமான்மயிலணங்கினமாகிவாலருவி *
மல்லிலங்கியவச்சிரப்படையதாய்வயங்கப் *
புல்லியிந்திரன்றானெனப்பொலியுமப்பொருப்பு. (௪)

வாணிநீங்கருமுகத்தினாற்பல்லுயிர்வருக்கம் *
பேணியிசையாற்பொன்னெனப்பிறங்கொளிதன்னான்
மாணிலாவியமாதவர்குழுவினான்மலரோ *
காணியாமெனவதிதரும்விதியினைக்கடுக்கும். (௫)

ஓங்கிநீடலின்முகில்போதிந்திருண்டபேருருவிற் *
றீங்கிலாதவெண்வகைத்திருமருவலிற்றிகிரி *
தாங்கிநிற்றலிற்சங்கமுற்றவிர்தலிற்சகத்தோ *
ரோங்கிடாதளித்திடுதலினாரணனேய்க்கும். (௬)

நீரினோடுவெண்மதியமுந்தலைமிசைநிலவி *
வேரிநாண்மலர்க்கடம்பனால்வேடரான்மிதிபட் *
டேரிலங்கியகொன்றையும்பணிகளுமேய்ந்து *
நாரிபாகனேயாமெனத்திகழ்ந்ததந்நாகம். (௭)

கடலினீரளப்பவொணாவம்மலைக்கவினைப் *
புடவிநாவலர்பலர்சொலிப்போந்தனரன்றி *
யிடமிதல்லநாமென்றமட்டியம்பவுமதனாற் *
றொடருமாக்கதையதன்வகைசொல்லுதுமன்றே. (௮)

அந்தமால்வரைதனக்குமாதவத்தினரார்க்குஞ் *
செந்தமிழ்ப்பெருங்கடற்குமன்னெனத்திகழ்முனிவன்
வந்தநாளிலிற்றாம்பிரவன்னிமாநதியைப் *
பைந்தண்வாரியிற்கொடுவிடுத்தடைந்தவப்பாலை. (௯)

நீடுநாணிருவிசற்பமாயிருந்தனனெறியிற் *
கூடுமாறுமுன்புரிந்தவேற்குருபரனருளே *
வீடுறுதுகண்விழித்திடப்பிரித்ததுவிழித்து *
நாடுவாழ்வதுகாணுறச்சிந்தையினயந்தான். (௰)

தெய்வநான்முகன்றலையினிற்பலிகொடுசிறந்த *
சைவநாயகனேயெனத்தகுமுருவிருக்க *
வுய்வதென்றெனுந்தளர்வுறுமாதவருருவ *
மெய்வதாகவென்னிமித்தமோதிருவுளமிசைந்தான். *

என்னனாரருட்பேறுறுமுன்னமுற்றேய்ந்தோர் *
மன்னர்போலுருக்காட்டியுநடித்தலின்மாறு *
யன்னவாழ்வடைந்தவர்க்கரசாகியுமமைவா *
னின்னல்கூர்பவனெனத்திகழ்கோலமொன்றெடுப்பான்.

தளர்ந்தகோவணங்கீண்முழுநீறுகைத்தடிகூன் *
வளர்ந்தகாதுகண்டிகைநரைதிரைமுதல்வயங்க *
வுளந்தயங்குநர்போற்சிலமொழியுரைத்திருமிக் *
கிளர்ந்தபைம்பொன்மேற்செம்பினைப்பூசிடுங்கிழிபோல்

வேடமவ்வணஞ்சமைந்தபின்னம்மலைவிடுத்து *
நாடடைந்துபன்னகர்தொறும்புகுந்துநற்றமிழ்ச்சீர் *
நீடலாதியவளமெலாங்கண்டனனிமலத் *
தாடலைக்கொடுசரண்புகத்தக்கவர்க்காணான். (௧௪)

வந்துசிற்சிலர்நின்குலமியாதெனின்மறைக்கோன் *
முந்துபாலனியானென்றனன்மரபினைமுதிரா *
விந்துசேகரன்குருபரன்சீடனென்றிசைத்தா *
னுந்துமாயுள்பல்லுகமுடிவுணர்வனென்றுரைத்தான். *

என்னவூணெனிற்கடலினும்பெரிதகடென்றா *
னின்னவாறுகண்டனனெனச்சிலபகரொன்றாற் *
பொன்னமாநதிவரன்முதலாவனபுகன்றான் *
கன்னலாலடுபாகுறழ்தமிழ்க்கடல்கடந்தோன். (௧௬)

மந்திரந்தெரிவேணிரதாதிகள்வாங்கித் *
தந்திடிற்கருந்தனம்விளைப்பேனெழிற்றரளப் *
பந்தியன்னபற்பாவையர்மயல்கொளப்பண்ணு *
மெந்திரந்தருவேனெனவிசைத்திலனந்தோ. (௧௭)

பித்தனேயெனச்சிலர்சிலர்பேசினரழைத்தா *
ரத்தகைப்பெயர்க்கருகனியானல்லனென்றறைந்து *
முத்தர்சேகரனிவனெனத்தேர்ந்திலர்முன்போற் *
கொத்தருமலர்ப்பொழின்மலயாசலக்குகையை. (௧௮)

நண்ணியோர்குறுநகையொடுமீண்டனன்வழியில் *
வெண்ணிறத்ததாய்வியனெழிலுடையதாய்மிகுத்த *
புண்ணியத்ததாய்ப்புந்தியின்மிக்கதாய்ப்புவியிற் *
றண்ணிலாவெனத்திகழ்ந்ததோர்நாய்த்தனிக்குருளை. *

கண்டுமாமுனிகருதுமுன்கடிக்கெனவணுகிப் *
பண்டுசெய்தவப்பயன்கொடுபணிந்துவாலசைத்துக் *
கொண்டுமோந்தருள்பொழிமுகநோக்கியேகூவித் *
தொண்டுநாடியசீடரிற்றொடர்ந்ததுமன்றே. (௨௰)

போனபோததன்புதுநடைபொறுத்திடாதிரங்கி *
ஞானவேள்கழற்றுணைமணம்விந்தமாநாகம் *
வானமேலெழலடக்கியவலிமுதல்வாய்ந்த *
தானதன்கரமலர்களாலெடுத்தனனணைத்தான். (௨௧)

அந்தவேளையிலமரர்கின்னரர்முதலானோர் *
கந்தமாமலர்பொழிந்தனர்கயிலையானெறும்பைத் *
தந்தமாவினைச்சிலந்தியைத்தறுகண்வாளரவை *
முந்தவாண்டமைபோலுமீதெனமிகமொழிந்தார். (௨௨)

தன்னுருக்கொடுசந்தனமால்வரைக்குவட்டின் *
முன்னுறைந்தவாறெழுந்தருளினன்முனிக்கோமான் *
றன்னுமக்குருளையும்வளர்ந்ததுபெருந்துணிவாற் *
பன்னுமாதவர்பற்பலர்புகழ்ந்தனர்பணிந்தார். (௨௩)

முத்தமிட்டனர்முதுவினைக்கடலினான்றிப் *
பத்தமுற்றவாபலவிதம்பயின்றனர்பண்டு *
மைத்தகைத்திருமாலணிநெற்றியிற்சூலக் *
குத்தமைத்தவன்களித்தருள்வாமிகக்கொண்டார் (உ௪)

ஆனநாவின்மற்றோர்பிரமாண்டமுற்றரிய *
ஞானமின்றியெண்சித்தியும்பெற்றொருநாத *
னியானடைந்தபேறெவர்க்குளதென்றிருமாப்போன் *
வானமேவழியெனக்கொடிப்புவனியில்வந்தான். (உ௫)

இங்குவந்தவனெண்ணிலாமுனிவரரொன்றுந் *
தங்குமால்வரைபொதியையேயெனத்தெளிதகையா *
லங்குபோயளப்பரும்புகழ்க்குறுமுனியறியப் *
பொங்குமானவவமுக்குறுமொழிசிலபுகன்றான். (உ௬)

கேட்டுமாதவன்மறுமொழிகிளத்திலன்றனது *
மாட்டுவைகியசுணங்கன்மேல்வலக்கைவெண்ணீறு *
போட்டுநோக்கினனுடனதுசெந்தமிழ்ப்புதிய *
பாட்டுமாலிகைபகர்ந்திடத்துவக்கியதன்றே. (உ௭)

அன்னவற்புதங்காண்டலுமவனடுநடுங்கித் *
தன்னகங்குலைந்திறைஞ்சினன்பணிந்தனன்றவர்கோன்
பொன்னடித்துணைசுமப்பதில்விழைவொடுபுலர்ந்தா *
னின்னதன்மைகண்டிருங்கடல்குடித்தவாயியம்பும். *

ஆணவப்பிணிகொடிதினுட்கொடியதேயதிலோன் *
றுணையந்தவர்க்கல்லதப்பெரும்பகைதவிரா *
வேணைபேறடைந்தாலுமியாதுயர்வெனல்வெண்மை *
யாணமோடுதற்பழித்தன்மெய்யுணர்வெனநவின்று. *

தொண்டர்காண்மலர்த்தொழுநலம்பெறும்படிசொல்லி
ப், புண்டரீகனைப்புடைத்தவன்றந்தமெய்ப்பொருளொ
ன், றுண்டதைத்தரும்பருவமீதன்றெனவுரைக்க, வன்
டர்வேண்டுமெய்ப்பணிசெயுமவர்புடையடைந்தான். *

கொள்ளைநாட்கழித்தகத்தியப் பெயர்முனிக்கோன்றன்
பிள்ளைபோல்வளர்த்தருளியபேறுறப்பெற்ற *
வெள்ளைநாயைநின்விருப்பமியாதுரையெனவினவ *
வெள்ளைநேர்குறைதானுமெற்கிலையெனுதந்தோ. (௩௧)

கற்பகத்தருநிழலரசுரிமையிற்கடையே *
னிற்பதற்கவாவடைந்தனனென்றதுநிகழ்த்து *
மற்பவாசகங்கேட்டலுநகைத்தனனந்நாள் *
சற்பமாகவோரிந்திரன்றனைச்செபுந்தகையோன். (௩௨)

இழிகுலத்தினர்க்கெத்தனைமேன்மையெய்திடினு *
மழிவின்மெய்ப்புகழ்விரும்பிடாவொன்றுளத்தமைத்து *
விழிகளாலுடன்பெரும்படிவிடுத்தனன்வினைபோ *
யொழியும்வீடுமோர்கொடிபிளிற்றாத்தகுமுரவோன். *

புதியவிந்திரன்பொன்னகர்புகுதலும்பழையோன் *
மதிகுலாமுகச்சசியைவிட்டழச்சிவன்மலர்த்தாட் *
டுதிகொள்பூசர்வந்தடுத்தனர்பிடித்தனர்தொலையா *
விதியைவெல்பவரியாவரொன்றேகியுமெலிந்தான். (௩௪)

ஒற்றையிந்திரன்கனகமால்வரைக்குகையூடுற் *
றெற்றைநாடுணையெய்துமென்றிருந்தவனிகலா *
மற்றையோன்வரக்கண்டுளமகிழ்ந்தனன்வந்தோ *
னற்றைவாழ்வடைந்தவன்வரற்குறித்துநொந்தனனால்.

அம்மலைக்குகையடைத்தடற்கணங்கள்போயினபின் *
மும்மலப்பிணக்கொழிந்தமாமுனிவனான்முகிலூர் *
செம்மலானவன்செழுமலர்க்கற்பகநிழற்கீழ் *
விம்மலார்முலையணங்கரான்மகிழ்ந்தனன்வெகுநாள். *

சூரனாதியதகுவராற்பெருந்துயர்துய்த்தான் *
வீரவேலன்மாலனையராற்பகையறவென்றா *
னீரமில்லவரிடுமகத்தவிகளுமேற்றா *
னாரதன்சொலாற்பரிபலதிருடவுநயந்தான். (௩௭)

இந்தவாறுபல்விதம்புரிந்திலங்குநாளிகத்திற் *
கந்தநாண்மலர்க்கமலனோதியபடிகனலில் *
வெந்தவாம்பரிநூறயின்றிடுமொருவேந்தன் *
றந்தவெண்களிறாதியாந்தகையெலாங்கவர்ந்தான் (௩௮)

முன்னுளாருடனிவனுமுற்றிடைந்தனன்முறையிற் *
பின்னுமோரிரண்டிந்திரர்பெயர்ந்தனர்பிறங்கன் *
மன்னுமைவருங்கவுரவக்குலத்திடைவையம் *
பன்னுபாண்டவராயினரன்னவர்பகுப்பில். (௩௯)

வேறு.

மத்தியிந்திரனாத்தென்றல் வரைமுனியருளால்வந்தோ
னத்திறத்தடற்காண்டபனாகினனவனைமாயன் *
சத்தியினரனென்றோங்குந்தனிக்கலைபுணர்ந்தநீரன் *
மெய்த்திறல்கிர்த்தியாதிவியனெலாமிகுத்ததம்மா. (௪௰)

ஈசனைத்தடங்கைவில்லாலிசைபடச்சடையின்மோதித் *
தேசவிர்கணைபெற்றுய்ந்தான்றிருமலிகனகநாட்டு *
வாசவன்பகைவர்ச்செற்றான்மணிமுகிலனையமேனிக் *
கேசவன்சூதனாகிக்கீழிருந்திடவுங்கண்டான். (௪௧)

இவ்விதத்தவன்செய்டலியாவையுமெளிதிற்றேர்ந்து *
செவ்விதினாக்கவல்லான்சிவனெனத்திகழ்பராசன் *
மைவிழிப்பேதைதன்பால்வழங்கியமகவேயல்லா[றே.]
லௌவியநெஞ்சத்தென்போன்றவர்சொலிலடங்காதன்

வெண்ணைசைபடவார்தாமேவிராப்பிடும்வியன்றோட்பா
ர்த்தன், மின்னனென்றுருவங்கொல்டுசிறந்துயர்திரு
க்காளத்தி, யண்ணலுக்கன்பனாகியடிபணிந்தாறுநாளிற்

கண்ணைப்பறித்துவெள்ளிக் கயிலைமாமலையிற்சேர்ந்
தான். (சரு)

கீரனென்றவனேதோன்றிக்கிளர்தமிழ்ப்பலகையேறி *
யீரமின்மனத்தார்போலுமீசனோடெதிர்வாதிட்டுக் *
காரமர்பொதியைக்கோமான்கழறிலக்கணநூல்கேட்டுக்
கோரவல்லரக்கிதன்னாற்குகையினுட்குறுகினொந்து. *

பைந்தமிழ்ப்பனுவலாற்றுப் படையெனவொன்றுபாடி
க், கந்தனுக்கணிந்துசெம்பொற் கதிரயிற்படையான்மீ
ண்டு, மந்தவன்பகட்டுக்கூற்றின்வசமுறாவரம்பெற்றே
கிச், சிந்தனைக்கினியவாழ்விற்சிறிதுநாளிருந்தபின்னர்.

முதிர்தமிழ்க்கவிதைப்பொய்யாமொழியெனவந்துதோ
ன்றி, யதிர்தொனிக்கடகச்செங்கை யணங்கெனோரரி
வைதன்னை, விதிமுறைமணந்துரோமம் வெளிறுமட்டி
னபத்தோடு, மதியினைச்சுடுவதாய வறுமையுந்துய்த்தா
ன்மன்னோ. (சசு)

எவ்வகைத்துயருற்றாலுமீசனையன்றிமற்றோர், தெய்வ
முந்துதியேனென்னுந்திடத் தினிற்சிறந்தான்செவ்வே
ள், கைவயின்வேலுந்தோன்றக் கனவினிற்பலகால்வந்
து. செவ்வனப்புறுபாட்டென்மேற்செப்பெனவிரக்கக்
கண்டான். (சஎ)

கோழியும்பாடிக்குஞ்சுங்கூறிடேனெனவேசொன்னான்
பாழிதோய்மனத்துக்கீரன்பட்டபாடறிதியென்ன *
வாழியங்கருணைச்சேந்தனறைதலைமதியானை *
னாழிகேழ்வரகுங்கம்புநாட்டினிலிரக்கநானான். (சஅ)
வாணனென்றொருவன்றன்மேல்வளங்கெழுகோவைபா
டிக்,காணமுந்துகிலும்பெற்றுக்கைவிரித்திரப்போர்க்கீ
ந்திட், டூணளவிரந்தகம்போடுரியவள்பசியைநாடி, யா
ணமிக்குருகிப்பாலையதனிடைநடக்கும்வேலை. (சகூ)
கரியமாமேகம்போன்று கையினிற்றடிவாள் வேல்கொ
ண், டெரியெழச்சினந்தகண்ணோடெயினனொத்துருவ
ங்காட்டிக், கிரியெலாமுடையகோமான் கிட்டியானெ
வுங்கேட்டா, னரியவாயுலரமெய்வேர்த்தச்சமிக்குறாக்
கலுற்று. (ருய)
புலவனென்றிசைத்தான்கேட்டுப்புன்னகைபுரிந்தவ்வே
டன், மலயமாமுனிவற்கன்றிமலரவன்றனக்குமின்றிக்,
குலவுபேர்தரித்துக்கொண்டாய்கொல்லெனக்குழப்பந்
தீர்ந்து, நலனுணர்ந்துள்ளான்கொல்லானம்பொருள்க
வரானென்ன. (ருக)
உன்னினன்மறுத்தோர்மாற்ற முரைத்திலானதுகண்ட
ன்னோன், கன்னிவண்டமிழிற்பாடல் கழறுநர்சிலரும
ப்பேர், சென்னிமேற்கொள்வார்பாடத்தெரியுமோவென்

றுங்கேட்டான், றன்னிறைமகனென்றேரான்றலையசை
த்தாமாமென்றான். (௫௨)

ஒப்பலுமென்பேர்முட்டை யுனதுசொற்சுவைச்சீர்தோ
ன்ற, விப்படுபாலைப்பண்போடிசைத்தொருகவிசொல்
லென்று, எப்படிப்பகரக்கேட்டுமநுதினங்குஞ்சியுன்
னச்,செப்பவனதனின்முட்டைசிறிதெனும்விதந்தேர்ந்
தில்லான். (௫௩)

பொன்னினைக்கடுக்குங்கள்ளிபொறிபறந்திடும்வெங்கா
னி, லென்னிளம்பேதைசென்றாளிகல்புகழிசைவேன்
முட்டைக், கன்னியப்பகைவர்போவாரதனிடந்தைக்கு
ம்வேன்முட், டுன்னிடுமெனவோர்வெண்பாச்சொற்றன
ன்சுவையின்மிக்கோன். (௫௪)

கள்ளியிற்பிடித்துவேவுங்கனல்படுகானில்வேல, முள்
ளிருந்திடுமென்றேதன்முறைப்பிழையன்றேவென்ன,
வெள்ளிலைவேற்கைவேடன் விளம்பினானுறச்செய்தப்
பாற், றெள்ளிமைப்புலவாநின்பேர்செப்பெனச்சிரித்து
க்கேட்டான். (௫௫)

ஐயுறவில்லான்றன்பே ரறைதலும் வெம்மைக்கஞ்சிப்,
பெய்யுமாமுகில்பெய்யாதுபெயர்தழற்கானத்தூடு, கை
யுலாம்வளையாள்சென்றாள்கவிப்பொய்யாமொழியின்றெ
வ்வர், செய்யுமாறென்றோர்செய்யுட்செப்பினன்றிகைக்
கக்கண்டான். (௫௬)

மின்னுமாமுடிகளாறும்விறற்பெரும்புயமுந்நான்கு, ம
ன்னுசீர்பிறவுந்தோன்றமடநலாரிருவர்பாகந், துன்னுற
நடிக்குமஞ்ஞைத்தோகையினிழலின்கட், பன்னுமவா
னவர்கள்சூழப்பளிச்செனச்சேவைதந்தான். (௫௭)

காண்டலுந்துதித்தான்வீழ்ந்தான் கண்ணினீர்கலுழ்ந்
தான்சோர்ந்தா, னண்டநின்புகழ்கூறுமவலத்தினீட்க
ழித்தேனென்றான், வேண்டல்பெற்றுய்ந்தான்செவ்வே
ள்விண்ணிடைமறைந்தபின்னர், பூண்டவிர்ந்தழகேபூ
ணும்பொற்கொடியுறும்விட்டுற்றான். (௫௮)

சிறிதுநாட்கழித்தப்பொய்யா மொழியடற்செழியற்கா
ண்பான், செறிபொழின்மதுரைக்கேகிச் சிவபிரான்சே
வைக்காக, வெறிகமழ்வேப்பந்தாரான்மேவுமவ்வேலைக
ண்டா, னறிதியானின்றனென்ன வறைந்தனனடுத்து
ஞ்சென்றான். (௫௯)

அஞ்சுறுதடுக்கக்கண்டவ்வாயனந்நாளிலுள்ள, விஞ்
சுபாவலர்போலிந்நாள் விளங்குநருளரோ வென்றான்
செஞ்சுவைக்கழகத்துள்ளார் திருவுருச்சிலைகளியாவுங்
கொஞ்சுசொற்கவிகேட்டொப்புக்கொடுதலையசைக்கச்
செய்தான். (௬௦)

துன்னசீர்கண்டும்வேந்தனையமுற்றிடல்கண்டப்பான் ※
மன்னரோயிழிவுற்றார்கள்வளர்கவிப்புலவர்தாழா,ரென்ன
வோர்கவிதைபாடியியற்றமிழ்ப்பலகையொப்பிப்,பொன்
னரவிந்தப்பொய்கைப் புனன்மிசைமிதக்கச்செய்தான்.

வேந்தவன்மனைவியோடு மெய்த்துணையவர் தம்மோடு,
மேந்தணிச்சிவிகையேறியெழினகர்வலம்வந்தேகி, நீந்
தருந்துயர்போய்வாழ்ந்துநெடுங்கதிர்வடிவேற்செங்கை
ச்,சேந்தனூர்தனிற்சாமீபத்திருப்பதமடைந்தானன்றே.

அறுவகைப்பிறவிசொற்றேமவற்றின்முற்பிறவியாதோ,
குறுமுனிவளர்த்தநாயின்குலவுசீர்ச்சரிதமொன்று, மி
றுதியிற்பகருமொன்றுமிகத்தினன்கிலங்காவாற்றாற், சி
றுகலும்விரிதருனுந்தீர்தரச்செப்பினேமால். (௩௫)

சுருக்கிடில்விளங்கிடாதுதுணிவொடுசொல்லுமட்டும்,
பெருக்கிடிற்பனுவல்கூடும் பெயரினுக்கிசைவுறாதாங்,
கிருக்கவுமிடையிற்காதையிரிரண்டடக்கிச்சொற்றேஞ்
செருக்குறுபுலவர்பல்லோர்தெளிவுறச்செப்பலாலே. ※

அருணையின்சிகரிக்கோயிலதனிடத்தயில்கொண்டோங்
கு,முருகவேளருளாற்கிள்ளைமுகமுனியழுக்காறெய்து
ந்,திருவுருப்பெற்றோன்முன்னைச்சீர்சிலதெரித்தேமன்
றே,னொருசிறுமதலையாகியுதித்தவாறுரைக்கலுற்றாம்.

பூர்வபுண்ணியச்சருக்க முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

திருவவதாரச்சருக்கம்.

அண்டமூடொருலோகமுந்தீவுநன்கறைந்து ※
கண்டமொன்றுபின்கழறியோர்தேயமூநாடும் ※
விண்டபின்னருணாசலப்புகழ்சொலவிரும்பேன் ※
றொண்டர்சூழதன்பெருமையைமுதற்சிலசொல்லி (௧)

அன்னதன்றொடர்பாமெனவவற்றையுஞ்சிறிது ※
சொன்னபின்னடித்துவக்கமாங்கதைவகைசொல்வே ※
னென்னகாரணமெனிலுலகியற்றினோன்புரப்போன் ※
புன்னகங்கெடுத்தோங்கியபொருப்பெனுமதனால். (௨)

அம்மலைத்திருவுருப்பலவண்டமுமணுவாச் ※
செம்மலாமெனக்கருதியுநம்பிடுஞ்சிலர்க்கே ※
வெம்மலப்பிணக்கறும்பலவித்தையும்விளங்குங் ※
கைம்மலைக்கிளையவன்கழற்பெருமையுங்காணும். (௩)

மேருவுங்கயிலையுங்குகன்றரப்பெறும்விதத்தை ※
யூருளாருணர்ந்துளாத்திடும்பெருநலமுன்னி ※
யாருறுஞ்சடைப்புனிதர்தாமலையுருவாயுஞ் ※
சீருலாமவன்பதச்சுவட்டணித்தலைசேர்க்கும். (௪)

பருமைசான்மூலப்பார்ப்பதிபரிந்தருளமுத *
முருகனுண்டவன்முகுளவாயூறலிற்கலந்து *
கருணையிசர்தாமுடித்தோன்மிசைவிழல்கடுத்தாங் *
கருணவெற்பிலிலப்பெயர்வாவியொன்றமையும் (௫)

வன்னமோகினிபுணர்ந்தநாளவள்பதமழுத்தோட் *
டுன்னவிசர்தஞ்சடைப்புனற்றுளிபலதோய்ந்து *
சின்னவாறெனச்சொரிதரவவர்மடிசெறித *
லென்னவோர்தடமப்பெயருடனதிலிலங்கும். (௬)

சிறந்தகாழியம்பதியினன்வாக்குமன்றேனு *
கறந்தபான்மொழிப்பரவைகோன்வாதவூர்க்கடவு *
ணிறந்தழைத்தசொற்புலவர்பற்பலர்மிகநிகழ்த்தப் *
பிறந்தமால்வளமாயிரம்புனையுமப்பிறங்கல். (௭)

நல்லவீகையிற்காமியல்பழியினுஞான *
வல்லபத்தினவொவ்விதவருத்தமுற்றேனு *
மெல்லவோர்சிறிதீதலொத்தழற்கிரிவிரித்துச் *
சொல்லரும்புகழ்ச்சோணமாநதியையுஞ்சொரியும். *

ஞானபண்டிதப்பெயர்மகவம்மலைநல்கி *
யானபாலனுலகத்தியமுனிவனைத்திருத்தி *
யூனமின்றியதமிழ்திப்பித்ததன்றேயம் *
வானளாவியநாவலந்தீவில்வைத்ததரோ. (௯)

குமரிகண்டமேழுதற்பகரொன்பதுங்கூட்டி *
யமரர்கோன்றிசையாதியாமெட்டிடனுக்கில் *
விமலமாமருணசலமூரும்வெள்விடையின் *
கமலநாண்மலர்ப்பதத்தினுக்கோரடிகாணும். (௰)

ஈசனுமருணசலநகிரியென்றிடும்போர்த் *
தேசவிர்ந்தகுன்றுதவுபாலாறெழிற்செய்யா *
றுசகன்றதண்கெடிலமாதியநதியனந்தம் *
வாசமாந்திருத்தொண்டைநன்னாட்டிடைமன்னும். ௰௧

ஐந்துபூதமுமாகியதலங்களினடுவா *
யிந்துசேகரனேமலையெனவிலங்கிடலாற் *
பைந்துழாயினன்பரவுமப்பருப்பதச்சார *
னந்துறுநடுநாடெனப்படிற்பலர்நவில்வார். (௰௨)

எண்ணுவார்வினையிரண்டுமற்றிணையில்வீடெய்தப்
பண்ணுமம்மலைப்பரிசினைப்பாம்பரசுரைக்க *
நண்ணுமாயினுநானுமென்றுற்சிறுநாயேன் *
புண்ணுலாமனங்கொடுபுகழ்கருதிடப்போமோ. (௰௩)

சிவத்தினுற்சமைந்துளவருணசலச்சிறப்பென் *
றவத்தனைப்பலமரங்களாதியபொருளறையென் *
றுவக்குகாதையுமவ்வளைப்பெயர்புனைதொண்டன் *
றவத்தின்மேன்மையென்றுவிளிச்சாற்றுவதென்னே. *

வேடர்சேரியின்சாரலும்பற்பலவிருகத் *
தாடலும்புனலருவிபுக்தோயும்வெற்பனந்தத் *
தாடவிர்ந்திடுமருணமால்வரையிணைபுரக *
பூடணத்தரன்றனெனக்கருதிடார்பொல்லார். (கரு)

அருணமால்வரைக்கனியமல்லதோர்நகரந் *
தருணமங்கையராடிடுங்கோயிலுந்தமிழ்ச்சொற் *
பொருணலந்தருங்கோபுரத்துயர்ச்சியும்புகலல் *
வருணமாந்தர்கள்வாழ்மறுகினங்களும்வயங்கும். கசு

வேறு.

தூயவர்விரும்புபலதுங்கமும்விளக்குந் *
தீயவர்குலத்தொடுதிடுக்குறவெருட்டு *
மாயனயனன்றுருவமாறிடவளர்ந்த *
சேயமலையொன்றுதிகழ்தென்னருணையூரே. (கஎ)

ஆனியில்பெரும்புகழனந்தமுறவாகும் *
வேனின்மதனைச்சுடும்விழாவணிமிகுக்குஞ் *
சேனிலவுவாவிடபலசேர்தரவிளங்கு *
நானிலம்வியந்துதொழுநல்லருணையூரே. (கஅ)

மாதவர்குழாமிகவும்வந்துகளிகூரும் *
வேதமுணர்மேலவர்விதித்தொழினடக்குஞ் *
சீதளமலர்க்கமலைசிந்தையொடுவைகுங் *
கோதறுசிவன்புகழ்குலாவருணையூரே. (ககூ)

நெற்பயிர்கரும்புகழைநீள்கமுகுவாழை *
பற்பலகுலத்தினர்பரிந்துறையும்விதி *
முற்படுபொருட்டொகுதிமுன்னியவைதம்மாற் *
கற்பனைமொழிந்தனர்கவிப்புலவர்பல்லோர். (உ௰)

அம்முறைவிரித்திடலடுத்ததலவென்றே *
யிம்முறைசுருக்கினமியற்றெனிமுழங்குஞ் *
செம்முறையுணர்ந்திலர்திருத்தியடையார்தா *
மெம்முறைவிளம்பினுமெமக்கதுசிறப்பே. (உக)

அந்நகாவளம்பொருமளப்பரியதொண்டர் *
முந்நவைதவிர்ந்தமுதன்முத்திபெறவென்றே *
செந்நலமிலங்குதிருவேடமொடுசெப்பு *
மெந்நகரிடத்தினுமிருந்துவரலுண்டே. (உஉ)

பொன்மலிநலந்திகழ்புகார்நகரில்வந்தோன் *
சன்மனருமுதுதவுகங்கைகுலமுற்றோன் *
மன்மகிழ்பொருட்கொடியர்வாணிபமுயன்றோ *
னன்மருதநாதரடிநாடோறுநினைப்போன். (உ௩)

வாசவன்முதற்பலர்மனத்தைவிலைகொள்ளு *
மீசனும்விலைப்படவிருந்தவம்விளைத்தோ *
ஞசகல்வடக்கினளகாபுரிபுரந்து *
நேசனெனவன்னவளிகழ்ந்தமுன்மகிழ்ந்தோன். (உச

மெய்த்துறவினோர்புடையின்மிக்கபுகழ்பெற்றோன் ❋
பொய்த்துகளொழிந்தகவிபோதவுருவன்றோன் ❋
மைத்துணைவிழிச்சிகையின்மாசுதவிர்பாண ❋
னுய்த்துளதொருசிகொடொருங்கறவொழித்தோன். ❋

தாயுரிமையொன்றுதணவாதகெனவைத்தோன் ❋
மாயுறுப்பிணத்தைபெருவாயெனொருபாவா ❋
லேயுமுயிரோடெழவெழுப்பன்முதலாக ❋
வாயும்விளையாடலளவற்றவைபுரிந்தோன். (௨௬)

தில்லைமருதூர்மதுரையாதியவைசேவித் ❋
தொல்லையினில்வீடுதவுமூருணையென்னுஞ் ❋
சொல்லைநனியுள்ளிநகர்தோறமுதிரந்துண் ❋
டல்லைகிர்கண்டருறுமப்பதியடைந்தான். (௨௭)

வேறு.

வந்தமாதவன்றன்வளர்செவிச்சீரும் வலக்கையிலுறுந்
திருவோடுஞ், சுந்தரவெண்ணீறணிந்த மெய்ப்பொலி
வுந்தூயகோவணத்தொடுபிறவு, மந்தமாநகரத்தனைவ
ருங்கண்டாரடித்திறைஞ்சினர்சிலர்சிலர்தா,நிந்தனைபுரி
ந்தார்சிறுவர்கல்லெறிந்தார்நிகழ்ந்தனவிப்பரிசனந்தம்.

கொய்யில்வேய்மென்றோட்கவுரிவாழிடத்தார் துலங்கு
மவ்வூர்ப்பெருங்கோயிற், பொய்யின்மெய்ப்புகழ்தோய்
பொருப்புடன்றெழுதான் புகழ்ந்தனன்சுற்றினன்புகழ்

சால், கையினிலுறும்பேய்க் கரும்புடன்கலுழ்ந்தான்க
ளிப்புறுநலஞ்சிலகண்டான், மையிலங்கியகட்சிறுமிய
ர்படைசூழ்மதனனைமதித்திடாமனத்தான். (௨௯)

ஆயகாலையிலச்சிவபிரான்கோயிற்கடிமையேயாப்ப
ணிபுரியுந், தூயவாணகையார்புடைவரக்கண்டோர்சுரி
குழல்புரிதவப்பயனுஞ், சேயவேள்பொய்யாமொழிமி
ன்மேல்வைக்குந்திருவுளக்கருணையுந்திரட்டோட், சீய
மேபோலத்திகழூம்வல்லாளன்சிகரியினதிட்டமுஞ்சே
(௩௰)
ர்ந்து.

வரம்பிலாதெழுதம்பிரமனுதரவான் மதனவேண்முதற்
றெருடுமலரி, னிரம்பிமான்மருவு நீலகண்டமும்வெண்
ணிலவணிசடிலமும்பிறவும்,பரம்பியநெஞ்சிற்பயமிலா
துருவிப்பாய்ந்திடச்செய்தலிற்பதைத்தான், றரம்பிரித்
திடின்மேலெனத்திகழொருமான்றனையடிக்கடிமிகநினை
(௩௧)
த்தான்.

ஆதிநாளமரர்க்கிசலவர்மூவ ரசமுகத்தொருத்தியோடு
திக்க, வேதியன்மகனுங்காசிபமுனிவன் மிசமனம்வரு
ந்தலுஞ்சகித்த, சோதிவானவனன்னவர்க்குறவாகித்து
தித்தமிழ்சொரிமுகிலனைய, நீதியோன்பிறத்தற்கிவ்வ
ணம்பொறுத்தநிலைமையோர்கொடிதலநிலத்தே. (௩௨)

எத்தனைவிதத்திற் றடுக்கினுங்கனன்மீ திழுகையைச்
சொரிந்தவாறுக, முத்தமென்னுலகிற்சிலர்பகர்பெயரா
ன்மோகமேமேமேலிடற்கொல்கி, யத்தனைக்கருதிக்கச்சி
லென்றொருபாட்டறைந்தனனதனிலுந்தவிரா, னிக்க
திக்கிவ்வூர்வசிப்புநன்றலவென்றேகினன்வடதிசையிட
மே. (௧௩)

கச்சியேகம்பங்கண்டனனிறைவன் கழல்பணிந்தப்பெ
யர்மகுட, மெச்சிடற்கினியசுவைமொழிப்பெருஞ்சீர்
மேவியமாலையொன்றணிந்தா, னச்சிவனிரங்கிமயலொ
ழித்திலனணிகொளாரூரிலோர்புலவ, னச்சியகொடி
பாற்றாதுமுன்சென்றே னவின்றிடாதிருந்ததென்விய
னே. (௧௪)

அஞ்செழுத்துரைத்துப் பரசிவனுருவத்தகஞ்செலுத்
திடுஞ்சமையத்து, மஞ்செனக்கறுத்தகூந்தலுந்தரளம
ணிநகைப்பவளவாய்வனப்பு, நஞ்செனவமுதமெனத்
திகழ்விழிபுநவில்வனபிறவும்வந்திலங்க, வெஞ்செயன்
மதவேட்கிளைப்பவர்போன்றே மீண்டனனருணையைவி
ரும்பி. (௧௫)

சென்றனன்விரைந்துசேர்ந்தனன்றெருவிற்சிறுவர்தாம்
பற்பலர்சேர்ந்து, பின்றனைத்தொடரத்திரிந்தனனொரு
நாள்பிரமைமைபப்பெருக்கியபேதை, குன்றவில்லுடை—

யார்கோயிலைநாடிக்குலமயிலெனவரக்கண்டான், முன்
றவங்காட்டிக்கொடுத்ததென்றடுத்தான்மொய்குழல்வெ
ருவிலண்மகிழ்ந்தான். (௧௬)

அன்னமிட்டடியார் தம்மொடுபழகுமகத்தினிற்பிறந்த
வாறதனாற், சின்னமென்முலையாள்சிரித்தமாமுகமுந்
சிந்தையுள்ளன்புமேற்சிறக்க, வென்னகாரணமெம்மடி
களேயெனக்கேட்டிருகையுங்குவித்தனளிணைதீ, ருன்
னதுமயலாங்கடலிடைதளர்வேற்கொருகைதந்தருளெ
னப்பிடித்தான். (௧௭)

தொட்டபோதச்சமானமோடுதிக்கச்சுரிகுழற்றேகை
நேர்மடவா,ணட்டமாடியபின்னெனமிகும்வேர்வைநகு
ங்கலைபணியொடுநனைக்கக்,கட்டமுற்றிடுமுன்விடமனை
க்கோடிக்கருணையந்தாயொடுபகர்ந்தா, னிட்டமாம்படி
யேநடந்திலாய்மகளே யெனவழைத்திடஞ் சொலெலன்
றெழுந்தாள். (௧௮)

அம்மகள்கரந்தொட்டவனுடற்பரிசமாகுமுன்குக்கும
ம்புணர்ந்து, மும்மலத்தொன்றாய் முடிந்தமெய்ப்பொரு
ளாய்முளைக்கும்வித்தாயசுக்கிலநீர்,செம்மவாவிருந்தம
னத்தினைக்கழுவுந்திறத்தொடுவெளிப்படத்தனது, கை
ம்மலரதனிலேந்தியாங்குதிர்ந்த கவினரசிலைபின்மேல்
வைத்தான். (௧௯)

வைத்தலுமவளைத் தாய்கொடுவந்தாள் மலரடிபணிந்த
னளெழுந்தம், முத்தவானைகையும்பதந்தொழப்புரிந்தா
ன்முன்னியவாறருள்புரியச், சித்தமூடிராங்க வேண்டு
மென்றிரந்தாள்சிறந்தபேரறிவினைமதித்துக், கைத்தல
மதனற்கட்டியோர்வெண்பாக்கழலினன்களங்கமில்கரு
த்தோன். (௪௰)

தோடவிழ்மலர்மெல்லளகமாபாவிலே தொடர்ந்தினைவி
ரும்பினர்போனார், நீடவிவதனைமறிதிநீயென்னைநினைத்தி
டிலிடுப்பினிலுதைப்பேன், கூடநான்விரும்பிலுதையெ
னும்பொருளுட்கொண்டனள் குறிப்பிலுதைக்கண்,
டாடகப்பணிதோய்மகளுனைக்கொடுத்தா ளதுமுதற்க
ருப்பமேயானாள். (௪௧)

கந்தலோகத்திலுறைபொய்யாமொழிப்பேர்க் கவியவள்
கருப்பையுட்புகலுஞ், சுந்தரக்களபமுலைமினார்கலவிச்சு
சப்பெருங்கடலுநற்சுவைதோய், செந்தமிழ்க்கடலுஞ்
செழிக்குமென்றருளாற்சேணத்திந்திராதியருஞ், சந்
தனப்பொதியைமுனிவனுதியருந் தனித்தனிகருதினர்
தாமே. (௪௨)

அருட்பெரும்பேற்றுக்குரியவன்கருப்பத்தமர்தலாலன்
னவட்கழகுந், தெருட்சியுங்கனவிற்றேவர்கண் முனி

வோர்திசூழ்நிலமாதியபிறவு, மருட்கொடுண்வெறுத்தன்
முதலியவியல்பும்வளர்ந்தனமாதமோர்பத்து, முருட்டு
தேர்ப்பரிதிமுடித்தநாளாயவொருசுபதினத்தில்வந்துதி
த்தான். (௪௩)

ஆறதாந்திங்கண்மூன்றதாங்கிழமை யரியநாள்பன்னிர
ண்டாகு, மூறணுகரிதாமிலக்கனமொன்பானுமவனுதி
த்தபோதென்கை, கோறலுண்டுவப்பார்குலமறக்களைந்
துருலவும்வேற்குருபரன்றனக்கு, நீறணிதகையாற்றவ
முதிர்ந்தவர்போனிலவுமென்றனக்குநிச்சயமே. (௪௪)

அன்னைபாலகனைக்கண்டுகண்களித்தாளவளிலெண்மட
ங்கவட்பெற்றுண், முன்னைநாணடந்த விதநினைத்துவ
கைமுழுகினண்மொய்குழலினத்தா, ரென்னையோவறி
யெம்பெண்பிறந்திடல்போன் றிவர்மகிழ்கூர்வதென்றி
சைத்தார், பொன்னைவேண்டிடுமவ்வினத்திலிவ்விருவர்
புகுந்ததுபோதனார்பிழையே. (௪௫)

டத்திரகிரிக்குத்திருவருள்கிடைப்பான்பருங்கழுவெரி
யெழப்பாடி, முத்திவேட்டிரப்போர்தமையிகழ் கொடி
யோன்முதுகுடர்சரிதரமொழிந்து, கைத்திடுமொருபே
ய்க்கரும்பினிட்பாஞ்சீர்கமழ்திருவொற்றியிலிங்க, சி
த்தியெய்தினன்றன் றனைத்தினாலுருவாஞ் சேயிதென்று
ணர்ந்துளார்சிலரோ. (௪௬)

ஆண்டொன்றெய்தவருணகிரியென *
வேண்டோர்நாமம்விதிமுறையிட்டுநற் *
பூண்டொகுத்துப்புதுக்கலையோடணிந் *
தூண்டொகைக்குளுறைப்பிலதூட்டினர். (௮)

வயதுமூன்றுவரச்சிறுதேருருட் *
டியல்பிற்பாட்டிக்கெழிற்பெருந்தேர்விழாச் *
செயலுநோத்திகழுநெய்த்திபமுங் *
கயல்விழித்தமக்கைக்கெதிரோந்தினன். (௯)

பொருவில்பாட்டிவிண்போயினபுண்பொரு *
துருகுமன்னையையூட்டிவளர்த்தசீர் *
கருதியேங்குமக்காளொடுகண்டுதா *
னிருகணீர்விட்டிரங்கலுமெய்தினன். (௰)

வருடமொன்றுகழித்தபின்மாசிலா *
வருணையீசர்க்கவர்பெருங்கோயிலின் *
முருகுவார்குழன்முன்னையையன்னைசெய் *
திருமணத்ததுதீர்ந்துவப்பாகினன். (௰௧)

சற்றுநாண்மகடன்குணமியாவையு *
முற்றுநாடியுவப்புறுந்தாய்மகன் *
முற்றுசீர்பெறன்முன்னிமுறைப்படி *
கற்றுவாவெனிற்கண்கலுழ்ந்தேகுவான். (௰௨)

செல்லல்காட்டித்திரும்பிவந்தாடுவா *
னல்லபாடநவிலவுமஞ்சிடான் *
வல்லபுந்திவருத்தனனீசனின் *
சொல்லமைந்தன்சுதன்வருகின்றிலான். (௰௩)

என்றுகல்வியியற்றாநேறதுசொற் *
றன்றுகாதுடைத்தாய்மனந்துண்ணெனக் *
கன்றுமோர்தினங்கந்தன்கனாவில்வந் *
தின்றுதொட்டவனென்மகவென்றனன். (௰௪)

அந்தணாயமுமாதியிலன்னவன் *
வந்தவாறுமதித்தனள்வாடிலாண் *
மைந்தனேழுவயதுமட்டுற்றபின் *
கந்தநாண்மலர்க்கார்குழற்றாயினை. (௰௫)

விண்ணுலோகர்விழைந்தனர்தான்பெறும் *
பெண்ணுடன்சிறுபிள்ளையென்றெண்ணிடேன் *
மண்ணும்வானுமதிக்கவல்லானவ *
னண்ணுமாறுநடத்தெனச்சொற்றபின். (௰௬)

பெற்றவாறும்பிறங்கிலைவேலுளான் *
சொற்றவாறுமெய்ச்சொல்லெனச்சொல்லிவு *
ளுற்றமம்மகளப்படிக்கல்லது *
மற்றுவாறுசெய்யேனெனமாழ்கினள் (௰௭)

மூவிருபொறியுங்குறியுமாதரவாமுருகனே முன்னிடுமவ
ர்க்குந்,தாவின்மெய்ப்புலவோர்தமக்குமாருயிர்போற்ற
னியருணாசலத்தலத்தின், மேவியவருணகிரியவதாரம்
விளம்பினனினியவன்வளர்ந்து, பாவிமாயையினாலுல
கினினிகழ்ந்தபலவினோதங்களும்பகர்வாம். (௪௭)

திருவவதாரச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

மாயாவினோதச்சருக்கம்.

கந்தநாதன்கருணையினாற்கமழ் *
சந்தவண்மைத்தமிழ்சொலப்பூமியில் *
வந்தபாலனுமற்றையபாலர்போ *
லந்தவுண்மையயத்தனனையயகோ. (௧)

ஆவெனுமிக்கமுதனனங்குறுந் *
தூவெள்வாரணைக்தோகைபரியாவருங் *
கூவெனேனைக்குரவையிட்டார்கொடி *
மாவெவ்வேறுமமஞ்சனமாட்டினார். (௨)

அளவிலெண்ணெயுமன்னநன்னீரும்விட் *
டுளதமிழ்ச்சுவையொப்பெனவூட்டினார் *
களகிலிட்டுயர்சூரியன்முற்செலும் *
வளமையாதியமற்றெதுஞ்செய்தனர். (௩)

எண்ணிரண்டுதினத்திலிசைந்தபல் *
புண்ணியங்கள்புரிந்தனர்போற்றினார் *
கண்ணிலெண்ணெய்கவிழ்த்தனர்திங்களிற் *
றண்ணிலாவியதாய்முகநோக்கினான். (௪)

இரண்டுதிங்கட்கிளநகைகாட்டினான் *
றிரண்டுமூன்றிற்றிகழ்ந்தனனாறினிற் *
புரண்டுகையைப்புவியினிலூன்றியோர் *
சரண்டலங்கத்தலையசைத்தாடினான். (௫)

அஞ்சுதிங்களிலார்வமிக்கன்புடன் *
கொஞ்சுவார்கரங்கொட்டிடல்கண்டுதன் *
னெஞ்சுவந்துகைநீட்டினனாறினி *
லெஞ்சுறுநிடுப்பேறல்விரும்பினான். (௬)

ஏழுதிங்களிலெட்டினிலொன்பதிற் *
றுழுழுதுதவழ்ந்துநடந்தனன் *
வாழும்பத்திற்பதினொன்றில்வாய்திறந் *
தூழுரங்கொண்டொசிறிதோதினான். (௭)

வாடியேங்கிடுமக்கலைவிட்டுவிட் *
டோடிவின் னில்லுறைந்தவனூற்றபின் *
சேடில்வேதன்கிளத்தியாள்மறை *
பாடிடும்பர்பலசடங்செய்தனர். (௰௮)

வேறு

கூறுமொழிச்சரதம்விடாத் தமக்கையன்றி யுலகின்மற்றோர்கொழுகொம்பில்லான், றேறுதமிழ்ச்சிறிதுணர்ந்தமட்டில்விட்டான்றெருத்தோறுந் திரியச்சோம்பான், சோறுமவள்போயழைத்துக்கொடுவந்தாலம்பகர்ந்தாற்றுய்ப்பானிந்த, வாறுவயதொருபத்தோடிரண்டாகுமட்டுநன்குவளர்ந்தான்மன்னோ. (௰௯)

ஆனைவருமாகின்மணி யோசைமுந்தி வருமெனல்போலாடல்கற்குந், தேனைநிகர்மொழிப்பேதைபெதும்பையரோடுறவாடிச்சிலவாறாடி, மானைவென்றவிழிப்பருவமங்கையர்க்குமிச்சைகொண்டுமனத்துள்வெட்கிப், பூனையெனச்சிறிதுநாட்கழித்தான்பின் பெருவேங்கைபோல்வான்மாதோ. (௨௰)

வயதுபதினாறாகுமட்டொருவாறிருந்தான்பின் மாதர்நல்லார், கயல்விழிப்பார்வையைப்பவளக் கனிவாயைமுலைத்துணையைக்கண்டுகெண்டு, மயல்வெறிகொண்டான்

றமக்கைசலியாமற்றரும்பொருளைவாங்கிவாங்கிப், புயல்பொழிந்தா லெனக்கொடுத்துக் கணிகையர்தம்மனைதோறும்புகுந்துமீண்டான். (௨௧)

ஊர்வியப்பப் புணருமின்னார்களும் வியப்ப விரவுபகலோய்வுறுமற், சீர்விதுவெண்குடைவேடன்றிருவிழாநடத்தியதாற்றேகந்தன்னிற், சார்வியாதிகட்கரசாம்பெருநோயின்றொடர்ச்சிகண்டுந்தளரானானான், கூர்விழிப்பாவையரு மெய்தும்பொரு ணிமித்தமருவருப்புக்கொள்ளார்போன்றார். (௨௨)

தம்பியையும்பொருள்வழங்குந் தனையுமுலகிகழ்வதஞ்சாத்தமக்கையன்னோன், வெம்பிணியுற்றதற்கிரங்கித்தடுப்பதெண்ணியன்னையன்றுவிளம்புமாற்ற, நம்பிநடந்தாள்பொருள்போய்ப்பலபணியு மனையும்விற்றுநல்கித்தீர்ந்தாள், கும்பியில்வைத்தாதரித்தார்பலர்கூடியொருருவங்கொள்ளல்போன்றாள். (௨௩)

தன்றலைமை யிழந்தினத்திற்றாழ்வானா ளக்கினிமுன்றாலிகட்டி, மன்றலணிந்தானையவொருவனுக்கும்வெறுப்பாணன்மஞ்சட்கொம்பாற், குன்றவில்லாரணிதாலிப்பொன்னைவிற்றுக்கொடுத்தில்லாள்கூலிக்குச்சிற், சென்றவன்றா மவனையழைத் தருமையுடனமுதிட்டாள்சிறிதுபாணன். (௨௪)

ஆடைசிறுத்துடன்மெலிவுற் றழகுகுன்றிக்கடன்வாங்
கற்கஞ்சிவாடிக், கோடைமயில்போற்றளர்வாணிலைபை
யுந்தன்னுடற்பிணியுங்குறியாவாற்றான், மேடைசிறுத்
ச்சானவிதங்கூறுதான் போவதெண்ணி விரைந்தான்வே
ண்டு, மாடைகொடுத்தனுப்பென்றானப்பொழுதுமனங்
குளிர்ந்தோர்வார்த்தைசொல்வாள். (௨௫)

யானுமொருகணிகையன்றி வேறலனீவிரும்புநலமென்
பாற்றுய்ப்பா, யேனுனக்கத்தனை தாரஞ்செலும்வருத்த
ஞ்சினக்குறிப்பென் றெண்ணேலென்றாண், மானுறழ்
கண்ணாண்மொழித்தீ யன்னவன்காதுட்புகுந்து மனத்
தின்மின்னு, ரூனுடலிற்கொள்ளுமைய லொருங்கறச்
சுட்டதுதிரும்பாதோடிப்போனான். (௨௬)

சென்றவனித்தேகாதி பிரபஞ்சமுழுதுநல்குந்தெய்வ
மொன்றுண், டென்றகிலங்கூறுமொழி மெய்யேயென்
றெளிதுணர்ந்தானிதயம்புண்ணு, மின்றதற்குப் பழி
கொடுக்கவேண்டுமெனுந்துணிவுற்றானிமயமென்னுங்,
குன்றநிகர்வல்லாளன்கோபுரத்தின்மீதேறிக் குதித்திட்
டானே. (௨௭)

வல்லாளனருணையுண்ணா முலைபாகர்கோயிலிற்செய்ம
திளிற்கீழ்பா, லெல்லாவிண்ணவருநருவுமமைத்தியற்று
ஞ்சிகரியின்மீதேறிவீழ்ந்தோற், கொல்லாமற்கீழ்விடுத்
தாக்குலவு முழுவெண்ணீறுங்கொற்றத்தண்டு, நல்லா
டைக்கோவணமுந்திகழொருவன்றோன்றிநின்றுநவில
லுற்றான். (௨௮)

இப்படிநீயுயிர்வெறுத்துவிழலாமாமுறைமையிதன்றி
னிமேற்செய்யே, லப்பவத்திற்செய்ததவங்காத்ததிவ்வா
றுயிரிழந்தோரனந்தங்கோடி, மெய்ப்பயனெல்லாமுனக்
கிம்மூர்த்திநல்கு மென்றொருசொல் விளம்பிச்சுட்டி,
யப்பழையகோபுரத்துவடவருகிற்றிருவுருவமதனைக்கா
ட்டி. (௨௯

யாமுனக்குச்சொல்லல்கவுமாரசடாக்கரமதனையியம்ப
ச்சோம்பேல், பாமுழுதுமியற்றுலம் பாலிக்குமுலக
முற்றும்பரவச்செய்யு, நீமுனைநாளிருந்தவிதந் தனையு
ணர்த்துஞ்சிலநாளி னெடுவேற்செவ்வே, டேமுறுவற்க
னிவாயார்தம்மோடுமெயின்மீதிற்றுலங்கச்செய்யும் ௩௰

என்னுமொழியுரைத்தானன்னவன்குமரகுருபரவேளெ
னத்தேர்ந்திலான், றன்னுநவத்தொருகவசியெனப்ப
ணிந்தான்கருணையினாற்றவளநீற்றை, நன்னுதலிற்றீட்டி
யவனறியமுன்றான்சுட்டியதனடுவிற்றானேனார், மின்னுற
ழப்புகுந்தான்கண்டுடன்வருந்தித்தேறிமிகும்வேட்கை
யுற்றான் (௩௧)

இன்னவிதம்பாதாளத் தினனொடுசொற் றுயச்செய்வா
னேகுவான்போற், பன்னரியபுகழ்ப்பரிதிப் புத்தேண்
மேற்றிசைக்கடலிற்படிந்தானப்பான், மின்னவிர்சிற்றி
டைத்தமக்கைவீடுதொறுந்தம்பியினைவினவிக்கோயின்

முன்னனாகிக் கண்டழுதான் முனிவியேலென்றாளவள் பான்மொழிவதானான். (௩௨)

அன்னையைநன்கறியேனானுயிரமன்னையுமுனக்கொப் பாகாருண்மை, புன்னைமுனிந்துய்வேனோவுனதுயா லென்றனக்கின்றுணர்வுண்டாயிற், றென்னையிந்தக்குக னுண்டுகொண்டான்மெய்யுனக்கு மென்பேற்றினிற்சற் றெய்தும், பின்னையொன்றுங்கருதேனின்சுதந்தரச்சோ றருந்தியுயிர்பிழைத்திடென்றான். (௩௩)

அந்தமொழிகேட்டவடன் றாய்கனவிற்கண்டேனென்ற றைந்தமாற்ற, மிந்தமட்டின்மெய்யாயிற் றெனத்தெளிந் தாள்குகவேளையிறைஞ்சிநின்றிடும், மைந்தனெண்முன் றுண்டனவுமருண்டுழன்றா னின்றுனது மலர்த்தாளன் பே, சொந்தமெனக்கைக்கொண்டான் புரப்பதுன்றன்க டனெனுஞ்சொற்சொல்லிப்போனாள். (௩௪)

பொன்போலுமவளருணைப் புனிதனார்கோயிலன்னம்பு சித்துச்சென்றாள், என்போடுங் கழித்தருணகிரிநாதன்க ண்களுநீரருவிகொட்ட, வன்போரும்புகழ்ந்துமனவரு த்தமுறக்கயிலாயமலைக்குச்சென்றாள், முன்போனபா ட்டியையுந்தாயையும்போலானந்தமுழுக்குற்றாளே. ※

வருத்தமுற்றவருணகிரியவனலமுந்தன்னலமுமதித்து த்தேறித், திருத்தகுகோபுரத்தானை வடவருகின்மாட

மெனச்சிந்தையூடும், பொருத்தமுறச்சிந்தித்துத் தந் தையைப்போலிரந்தமுதுபுசித்துப்போதப், பெருத்த குட்டநோய்தவிர்ந்தானுலகத்தார்நிந்தையெனும் பிணி யுந்தீர்ந்தான். (௩௬)

மூன்னுருவத்தினுஞ்சிறந்தவடிவமுறக்கண்டுடலமோக மின்னார், பொன்னுசவவேண்டாமென்றனைத்தழுவிக் கொள்ளலொன்றேபோதுமென்றார், பன்னுமொழிச்சு வைக்குருகான்வச்சிரப்பாறையிற்கடினம் படைத்தான் சிந்தை, மன்னுதிருவேடமுமோர் தவசியைப்போல்வந் துகுகன்வழங்கப்பெற்றான். (௩௭)

கண்டுசிலர்தெண்டனிட்டார்கணிகைமைந்தனெனச்சி லர்தாங்கருதிப்போனார், கொண்டுவந்தாங்கமுதளித்தா ர்சிலர்சிலர்தாங்குகனருளாற் குறித்தசீர்பெற், றாண்டு வரும்பைம்பொன்னுமிரசதமுமணிக்குவையுமுய்த்தா ரப்பான், மண்டுபுகழ்க்கோபுரத்தை யொட்டியொருதி ருக்கோயில்வயங்கிற்றன்றே. (௩௮)

திருமாலாதியருலகின்மானிடயாக்கையிற்புகுந்துதி கழ்வுற்றாலும், வருமாயையருணகிரிநாதனைச்செய்வி நோதமிந்தமட்டிற்சொன்னேன், மருமாலைக்கடம்பணி யுமீரிருதோட்செவ்வேளைமனத்தானாடி, யருமாந்தமயி ன்மேற்கண்டருட்பேறுபெற்றவிதமறைகுவேனே. ௩௯

மாயாவிநோதச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந் துணை.

அறுமாமுகமாறுநெறிப்பொருளென் *
றிறுமாப்புடனெம்முறையும்பகர்வான் *
குறுமாமுனிவன்கொளுநன்னிலையைப் *
பெறுமாறுபெருக்கநினைத்தயர்வான். ௰

கொள்ளுஞ்சமையத்தினர்மெய்க்குருவா *
விள்ளும்பொருள்வேலவனென்றுணர்வான் *
றெள்ளுந்தமிழ்கொண்டுதிருப்புகழே *
யெள்ளும்பிழையின்றிமிகப்பகர்வான். (௰௧)

ஆறாறுசகத்திரமன்பர்பெறும் *
பேறாயதிருப்புகழ்பேசியபின் *
யாறாதவறத்தொகையானவகுப் *
பூறாமையின்றியுரைத்தனனால். (௰௨)

வேறு.

இவ்வாறுநாடோறு முயலருணகிரிநாத னெனுமன்பன்
முற், செவ்வானமிகநாணு மெழில்கொண்டகுகனீடில்
சிகிவாகனத், தெவ்வானவருமென்னையலதில்லைபஞ்சே
லெனச்சொற்றுவந், தொவ்வார்தமுயிருண்டுவருதுங்க
வடிவேலொடொளிர்வுற்றனன். (௰௩)

கண்டான்வணங்கிப்புகழ்ந்தானெழுந்தான் கரஞ்சென்
னிமேற், கொண்டானுள்வெப்பங் குளிர்ந்தான்மகிழ்ந்
தான்குதித்தாடினான், வண்டாயகண்பெற்ற தாய்மாரு

மப்பாவருந்தேலெனா, விண்டாரநோக்கக் குழைந்தான
ளப்பற்றவீறெய்தினான். (௰௪)

முக்கட்பிரானுக்குமுன்னாளிலன்றேன் மொழிந்திட்ட
தாஞ், சிக்கற்றவுண்மைப் பொருட்டந்திடக்கொண்டு
தெளிவாகினான், மக்கட்குலத்திற்பிறந்துந் தனித்தெய்
வவடிவாகினான், மெய்க்கற்பிருந்தும்பிறர்க்கொத்திருந்
தான்விளக்கத்திலே. (௰௫)

வருக்கைப்பலாவின்கனிக்கீயையார்போய்வரச்சொல்
லுவார், மருப்புட்பமோர்பான்மலர்ந்தானல் வண்டெவ்
வணஞ்சுற்றுமோ, குருத்தத்துவத்தோரை யெவ்வாறு
ணர்ந்தன்பர்கொள்வார்களோ, பொருப்பொத்தவருணை
புரிக்கோபுரத்தாடல்பொலிவுற்றதே. (௰௬)

வந்தார்வினைக்கோர்மருந்தானவெண்ணீற்றின்வலியுற்ற
து, செந்தாதுநீபப்புயக்காரன்வேல்வென்றிதிகழ்வுற்ற
து, சந்தாகரச்செந்தமிழ்ப்பாடல் பலகோடிகழைவுற்ற
து, பொந்தாருமாவிற்குயிற்கூவுமருணைபுரிக்கோபுரம்.

தையற்கொடுத்தற்குமஞ்சாதபுகழ்கொண்டகவிமன்ன
வன், செய்யச்சிறந்துற்றபடியான்மெய்யடியார்கள்சீருற்ற
து, மையற்றவிர்க்குங்குகன்றொண்டர்குழுவென்றுமலி

முருகக்கடவுடுணை.

அருட்பேற்றுச்சருக்கம்.

பெருமைப்பிணிபிற்பிழைபட்டுழலா
தருணைச்சிகரிக்கழகாகியநல்
லுருவத்தினுளூற்றவனோதியதைக்
கருதிக்கருதிக்கசிவுற்றனனால். (௧)

முன்வந்தவர்பின்வருமுத்தர்முதற்
றன்வந்தனைகொள்பவர்தம்முருவோ
டென்வந்துகனவிலிலங்கினும்வேன்
மன்வந்தனனென்றுமதித்தனனே. (௨)

குலிசந்திகழ்சூலமுதற்குளிர்தோள்
வலிகண்டுவழுத்தெனவந்தொருநா
ளொலிதங்குகழற்குகனைப்பறுசீர்
மலிசெந்தமிழ்வண்மையளித்தனனே. (௩)

அந்நாண்முதலாவருமைப்பனுவற்
செந்நாவலர்மெச்சுதிறத்தினவா
யெந்நாளுமிசைந்திடுமட்டெழில்வேண்
முந்நாலுபுயத்தின்மொழிந்தணிவான். (௪)

வானாடர்வழுத்திவணங்குறுநற்
சேனாபதியென்றுறுசிற்பரவே
டானவராலுந்ததியிற்குலவா
வேனனதுமுள்ளிமெலிந்திடுவான். (௫)

கனவிற்சிலகண்டுகளித்ததுபோ
னனவிற்றிகழாமைநவின்றுழல்வான்
சினவிற்புருவச்சிலைவேடமினாண்
மனவிற்குறிசொல்லமகிழ்ந்திடுவான். (௬)

அயலார்மொழியாமசரீரியெலா
மியல்போடுபொருந்தவிசைத்துணர்வான்
மயலார்தருமற்றவைவிட்டொருநிச்
சயமாகியபத்திதனைப்புகழ்வான். (௭)

முன்னஞ்செயுமாறுமுனைச்சிகரிக்
கின்னஞ்செலலாமெனவெண்ணிடுவா
னென்னன்பையறிந்துமெழிற்குகவேள்
கின்னம்புரிகின்றதெனென்றழுவான். (௮)

இத்தெய்வமலாதெவர்செப்பிடலும்
பொய்த்தெய்வமெனுஞ்சொல்புகன்றிடுவான்
முத்தெய்வமுமூவுலகத்தினும்வா
ழெத்தெய்வமுமீதெனவும்பகர்வான். (௯)

கின்றதாற், பொய்யற்றஞானப்பொருப்பாய வருணபுரி
க்கோபுரம். (௰அ)

கூட்டம்பெருக்கின்றகுணரூபம்வைத்தெண்ணில்குரு
வானசெவ், வேட்டம்பிரானுக்கு மவனண்ணனுக்கும்
பொன்வீடாவது, பாட்டந்தசந்தம் பகுத்தோதுசவுமா
ரர்பலர்வந்துசம், பூட்டன்செய்தானென்று குடிகொள்
ளுமருணபுரிக்கோபுரம். (௰௯)

வெள்ளத்தையொக்குந்துணைக்கொங்கையெழில்கொ
ண்டமறவள்ளியைக், கள்ளத்துணிந்தோனுமவனோடுது
ணையானகாரானையுங், கொள்ளத்தகுந்தானமிருமாடமெ
ன்னக்கொடுத்திட்டது, புள்ளட்டநெடுமாயனெனநீடும
ருணபுரிக்கோபுரம். (௨௰)

தன்மேன்மையெண்ணித் தனைச்சாருவார்க்குண்மைதர
லுற்றது, நன்மேகலைப்பாவைமார்வந்துதினமாடுநடன
த்தது, சன்மேவுலாவுங்கழற்கந்தன்விளையாடல்களின்
மிக்கது, பொன்மேருவென்னச்சிறக்கின்றவருணபுரிக்
கோபுரம். (௨௧)

தழைச்சைக்குரூரத்தர்தம்மைக்கெடுக்கின்றதகையுற்ற
பின், பிழைக்கைக்கிரப்பார்களனைவோருமொழிவண்
மைபெருகுற்றது, கழைக்கைச்சமர்க்காரனயனோடமு
க்காறுகழறத்தினம், புழைக்கைக்களிற்றோடுருகன்வா
ழுமருணபுரிக்கோபுரம். (௨௨)

அக்கோபுரத்தாடன்மலிநீர்மைகண்டார்களவ்வாலயம்,
புக்கோதவிடமுண்டபெருமானைவழிபாடுபுரிகொண்ட
ர்தா, மிக்கோசையுற்றார்கள் வேலோனையங்குற்ற மே
லோனுடன், றக்கோர்தகும்பண்பின்முன்பேணி ஞரு
ண்மைதனைநாடியே. (௨௩)

விள்ளும்புகழ்ச்சோண கிரிநாதர்கோயிற்குள் வியனார்
பொருட், கள்ளுந்தொழிற்றுட்டர்கண்டஞ்சியுள்ளங்
கலங்கிப்படல்வா, றெள்ளும்பிணக்குற்றகன்றார்களினை
யனையென்செய்வனோ, தள்ளுங்கோல்வேல்கொண்டு
சாடுங்கொலென்னுந்தவிப்பெய்தியே (௨௪)

வேறு.

வியன்மயில்விருத்தஞ்செவ்வேல் விருத்தமாதியபல்பா
ட, னயனுறப்பசர்ந்தங்குற்றுனளிர்பொழிலருணைக்கு
ன்றி, னலருகடுத்துச்சேய்போன்றவிர்பழமலையிற்கிழ்
பா, லுயர்குகைதிருத்தியோவ்வோர்வேலையங்குற்று
மீண்டான். (௨௫)

அப்படிச்சிலநாள் போக்கி யறைந்தபாட் டரங்கேற்றற்
கோ, துப்பவிர்மேனிச்சேந்தன்சொல்லியபடிக்கோதுநீ
ருப்பமுதமைந்ததாலோ வுணாக்குமற் றெதனாற்றோ,
வெப்படரவூர்கடோறுமேகினனிச்சையில்லான். (௨௬)

குன்றமுங்குகையுஞ் செம்பொற் கோயிலுங்குறுகிக்க
ண்டு, மின்றனைநிகர்வேற்பெம்மான்வியன்புகழ்விரித்து
ப்பாடிப், பொன்றயங்கியமேன்மாடம்பொலிகொடிபுய
லுக்கப்பாற், சென்றவிர்சிறப்பின்மிக்கசெந்திலம்பதியி
ற்சேர்ந்தான். (உஎ)

காருடற்சூரன்மாயக்கணங்களோடயிலோன்வந்த *
சீருமற்றுளபல்வீறுந்தெளிந்ததாலுவகையெய்தி *
மேருவிட்டந்நாள்வந்தவேதியர்முதலங்குள்ளா *
ரியாருமுற்றின்துகேட்கவிசைத்தமிழ்படிக்க லுற்றான்.

பரங்கிரியாதியாயபலபலதலந்தோறவ்வத், தரம்படுதல
த்திற்காயதமிழின்மட்டுணைத்துமீண்டோ, னிரங்கொலி
க்கடற்செந்தூரிலெவ்வகைத்தலத்தின்மீதும்,வரம்பெற
த்தொடுத்தபாடல்வகையெலாம்வகுத்துச்சொன்னான்.

சந்தனுசலத்துச்செவ்வேடலையசைத்துவக்ககண்
டான், செந்தமிழதனுலியான்சொறிருப்புகழ்முழுதும்
பாடம், வந்தவரடியேன்பெற்றவாழ்வுறவேண்டுமென்று
னந்தவாறளிக்கச்சோம்பே னஞ்சலென்றுணாக்கக் கே
ளான். (ருா)

சிந்தெனுங்கடலிற்றன்கைத்திருப்புகழ்முழுதுஞ்சிந்தி
நொந்தெரிமனத்தனுகிநுவலுமேற்றிசையைநோக்கி *

யிந்தெனுந்தவளநீற்றனிலஞ்சியம்பதியிற்சேர்ந்தா *
னந்தெறியலைபல்வாருநல்லிடவுலகோர்கொண்டார். *

அப்பதியடைந்தவன்றனையிலுடைக்குமரவேளின் *
மெய்ப்பதம் பணிந்து போற்றிவி யன்றிருப்புகழ் நால்
போன, வெப்பநோய்மலியநின்றன்வேலையிற்சிதறலே
னுங், குப்பமாவொருக்காற்கூடிக் குலவுமென்றுணரப்
பெற்றான். (ருஉ)

அத்திருநகரிற்சின்னாளமர்ந்திருந்தருணைக்கோயிற் *
சித்திரச்சிகரிச்சேந்தன்றெரிசனத்தாவன்மிஞ்சிப் *
பத்தியால்வழியிலுள்ளபருப்பதமுழுதும்பார்த்து *
முத்திநல்கிடுமெவ்வூரின்முன்னியவாறுசேர்ந்தான். ருரு

காயிரும்பனையமேனிக்கடவுள்வாழருணையூரின், மேயி
ருப்பவர்களெல்லாம் விரும்பினர்வினவிச் சூழ்ந்தார் *
கோயிலிற்சிலருமார்வங் கொண்டனர் சிலர்துன்புற்று *
ராயினும்வழக்கம்போலச்சிகரியிலமர்ந்திட்டானே. *

ஆடுறுமயின்மீதேறுமயிலவனருட்சிறொன்றே *
நாடுறுமவனக்கோயினன்முகப்புறையும்வேலை *
பீடுறுமவ்வூராளும்பிரபுடதேவனோர்நாண் *
மாடுறும்பலர்களோடும்வந்தனன்மதமாப்போன்றே. ()

வருமவன்றன்னைப்பாரான்மலைமணங்கமழும்வண்மைக்
திருவடிகருதியுற்றான்சேவகர்சிலர்வந்தொன்றார், கருவ
றக்கலையுந்திண்டோட்காவலன்வரவுசொன்னு, ரொரு
திருவெண்பாவப்போதனைத்தனனுணர்வின்மிக்கான்.

தந்திமாமுகவன்றன்னைச்சற்குருபரனையார்க்கு *
முந்தியதம்பிரானைமுறைப்படிவணங்கியுண்மை *
மந்திரங்கருதிக்கந்தன்வளமைசேர்பெயர்கொண்டாடி *
யுந்திறமாப்புற்றேமற்றோருவரார்பயனியாதென்றான்.

தந்தைமுன்சோழராசன்றனையவமதித்தானென்றிவ் *
விந்தைசெய்தான்சொல்வேந்தன் வினவிவந்தருகினின்
று, நந்தையார்தாயார்நன்கு நுவலெனக்கேட்டானப்
போ, தெந்தைவேற்குமரனுத்தா ளிளம்புனக்குறத்தியீ
சன். (௩அ)

ஒருமுறைதனக்குப்பாட்டனுலகெலாமுய்யக்காத்தா *
ளருமைசால்பாட்டிமாமனைங்கணைக்கிழவனம்பொற் *
பெருமலைதனைப்போர்த்தாலும் பெயர்க்கொணுப்பிள்ளை
யார்தாம், பொருவிலாப்பெரியதந்தையெனுங்கவிபுகன்
றான்மாதோ. (௩௯)

நல்விதியினைற்கோபநணுகிலானைகைத்துக்கொண்டா
ன், செல்வியின்றோடர்பாலீசன்றிரும்பவோர்முறையெ

னென்னுஞ், சொல்லினிவிலன்றன்பித்தைத்தூயவன்ற
னதென்றோர்ந்தான், கல்வியின்பெருமைதானுங் கருதி
டாதான்றன்மன்னோ. (௪௰)

பிரணவப்பொருளைச்செவ்வேள்பேசிடப்பெற்றநீரா, ல
ரனகத்தியனென்றுள்ளார்க்கடுத்தசோதரனுமான, வர
முனிவிளையாட்டிஞ்சுவண்ணமெண்ணிறந்தகோடி, நிர
திசயானந்தத்தநிலைத்துமெய்யருளாற்செய்தான். (௪௧)

அன்னவைமுழுதுந்தேறேனறையவும்வல்லேனல்லேன்
சொன்னமட்டருட்பேறென்னுஞ்சருக்கத்தைச்சுருக்கி
யப்பாற், றென்னவனாட்டிலுள்ள திருவில்லிபுத்தூராழ்
வான், றன்னகங்கெடுத்தவீறுதனைச்சிறிதுரைசெய்வே
னே. (௪௨)

அருட்பேற்றுச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந் துணை.

உ

முருகக்கடவுடுணை.

வில்லிபுத்தூராழ்வார்கலகச்சருக்கம்.

பொதியமால்வரையாதியபலமலைப்பொலிவு *
மதிரும்வார்திரைத்தாம்பிரவன்னியாதியவா *
நதிகளாற்புகழ்மாட்சியுஞ்செந்தமிழ்நலமும் *
பதியவிண்ணவர்நாட்டினுஞ்சிறந்ததுபாண்டி. (௧)

மஞ்சருப்பசுஞ்சோலையும்வண்டுதேனருந்தித் *
துஞ்சலார்மலர்த்துணர்சருங்காவிசெங்குமுதங் *
கஞ்சமார்புனல்வாவியின்பெருக்கமுங்கவின்று *
தஞ்சமாமெழிற்புவிமகடலையெனத்துலங்கும். (௨)

ஈசனம்பிகைமுருகவேளென்னுமூவருமுன் *
னுசகன்றசெங்கோல்பிடித்தரசியற்றியதால் *
வாசவல்டமிழ்ச்சங்கமோர்மூன்றுமன்னியதாற் *
பேசரும்புகழ்படைத்ததுபிறங்குதென்னாடு. (௩)

அஞ்சருத்தனிவீரமுமாண்மையும்புனித *
மிஞ்சுபான்மையுமீகையுமிரக்கமும்வேலை *
நஞ்சுகொல்டவனடியாராற்சமண்கெடுமாறுங் *
கொஞ்சுமங்கையராடலும்பாடலுங்குலவும். (௪)

வாதவூர்முனிகுருசையூரினன்முதல்வல்லோர் *
போதவந்துதித்தளவறப்புகழ்ந்ததென்னாட்டி *
னேதமின்றியசீர்பலகவிஞருமிசைத்தா *
ரோதவேண்டுநருரைப்பவர்பற்பலருளரே. (௫)

தக்கநாட்டினிற்சதுரவான்கிரிநெடுஞ்சாரன் *
மிக்கசீர்த்திருவில்லிபுத்தூருளதகனின் *
மக்களுடயர்மறைக்குலம்வாழ்வுறவந்தோன் *
திக்கடங்கவுண்டுமிழ்ந்தவன்பதந்தொழுந்திறலோன். ௬

கொங்குமன்னவன்வேண்டலிற்குருகுலத்தினர்சீர் *
பொங்குதீஞ்சுவைத்தமிழ்க்கவியான்மிசைப்புகன்றோன்
றங்குசாருவபூமனென்றொருபெயர்தரித்தோன் [ன்.
மங்குல்போற்கவிபொழியுமோர்துணைவனை வாய்ந்தோ

சந்தவான்கவிதொடுப்பதிற்றன்னையேமதித்து *
வந்தநாவலரளவிலார்தம்மொடுவாதிட் *
டந்தமன்னவன்கொடுத்தகூன்வாட்படையதனாற் *
செந்தலைச்செவித்துணையறக்கொய்தலிற்சிறந்தோன்:

அனந்தனென்னுமோர்பாவலன்றன்செவியறுப்பான் *
சினந்தபோதவனென்பெயர்ச்சேடனுக்கிலையான் *
மனந்தளர்ந்திடேனென்றனன்விடுத்துளமகிழ்ந்தான் *
கனந்தழைத்தசொற்றதிக்குதவியநலங்கண்டு. (௯)

தனதுபாடலுக்கொருநயம்வருமெனிற்சமையத் *
தினர்விரோதமெத்தனைவருமாயினுமென்று *
னெனலன்றேனமொன்றெய்தருமிருபதத்தினனு *
மனகனின்றொருபன்னிபின்றொடர்ந்தனவந்தோ. (௰)

என்னுபாரதத்தியம்பியதன்மையாலிலங்குங் *
கன்னபார்த்தன்வில்லடியினைப்புகழ்ந்ததுங்காட்டுந் *
துன்னுமுத்தமிழ்மகம்பொழிகளிற்றினஞ்சோர்ந்து *
முன்னுபேரொலிச்சந்தவாய்க்கோளரியேறே. (௰௧)

வேதியன்றமிழ்விழவழவென்பவர்வெருவ
மோதிடுந்தொனிப்பனுவலான்முழுதுலகளந்த
வாதிநாரணனடியவர்க்கடிமைசெய்தவ்வூர்
நீதிவேந்தனுமதித்திடநிகழுமந்நாளில். (௰௨)

கச்சிமாநகர்விடுத்தொருவயிணவன்கரியோ
னச்சிவாழ்திருப்பதிசிலபார்த்தபின்னறைப்பூம்
பிச்சியாதியமலர்முடித்துதவுமோர்பேதைக்
கிச்சியாமகிழாட்டிறுமத்தலத்தெய்ந்தான். (௰௩)

முழுகிநாமமுந்நான்குமிட்டரிகரிமுகுந்தா
பழுதில்கேசவாநாரணாவெனமிகப்பரவி
யெழுதொணாமறைக்குலத்தினற்சடந்துசற்றியற்றி
யழுதகண்ணுடனஞ்சலிக்கரத்தினனாகி. (௰௪)

கோயிலுட்புகுந்துயர்ந்துளார்விதிப்படிகும்பிட்
டாயினித்தநெய்படிசிலாதியவயின்றப்பால்
வாயிலிற்சிலநேரமுற்றிருந்தவ்வூர்மாந்தர்
மேயியம்பிடுமொழிகளாலவன்புகழ்விரும்பி. (௰௫)

அந்தவேதியன்சாருவபூமன்வாழகத்தில்
வந்தபோதவன்வாளுடன்றிகழ்ந்தனன்வணங்கி
யிந்தவாள்செயலென்னெனக்கேட்டனனெதிர்த்த
சந்தநாவலர்செவியறுத்திடுமென்றான்சாற்றும். (௰௬)

எங்கணாட்டுறிஞ்சுதரிசனாசலத்திடத்தோர்
துங்கநாவலனுமவன்சுடலையிலாடுஞ்
சங்கரன்சிறுமகன்பெருமாளெனச்சந்தம்
பொங்கமார்தரப்பொழிபவனெனப்பலர்புகல்வார். (௰௭)

அன்றியெங்களூர்க்குமரகோட்டத்தில்வந்தனனாஞ்
சென்றிடுஞ்சிலர்பார்த்துவந்துரைத்தனர்தேகத்
தொன்றிவீழ்பொடிப்பெருக்கமுங் கோவணத்துடையு
நின்றிரந்துணுமோடும்வைத்தரனெனநிகழ்சீர். (௰௮)

கொண்டுவாழ்பவனுமவன்றன்னிடங்குறுகி
மண்டும்வாதுசெய்துயரவும்வல்லைகொலென்றான்
விண்டுவன்னவன்கேட்டலும்வீரமிக்கெய்திக்
கண்டுசொல்லலேனடங்குவாவென்றனன்கழறும். (௰௯)

குருகைதென்குறுங்குடிமுதற்காண்பதுகுறித்தேன்
பொருவிலாயெனையனுப்பெனவிரந்தனன்போனான்
கெருவவாரிதியனையவன்பற்பலர்கேட்ப
வருணையூரிலோர்புலவனையடக்குதற்காக. (௨௰)

இன்றுபோதுமென்றொருதினங்குறித்தனனியாரு
நன்றுநன்றெனவிசைந்தனர்தடுத்திலர்நாற்பா
லென்றுசொல்படைக்காவலனெனப்பலரொன்னாத்
துன்றுசீருடன்வடதிசைநோக்கினான்றுளிர்ந்தே. (௨௧)

செல்லும்வேலேயிற்சிவிகைதாங்குநர்முதற்சிலர்தா *
மொல்லுநற்சகுனங்கிடையாவிதமுன்னி *
வெல்லுவானவன்ருனெனப்பேசினர்மெல்ல *
வல்லுடன்பகல்விளாந்தனனருணையையடுத்தான் (உஉ)

ஆனேதேர்பரியாட்பெருக்கனுகல்கண்டயலார் *
சேனேயென்றடற்பிரபுடதேவமாராசன் *
ருனேயார்த்ததுவருமவனெற்றர்கடாமக் *
கோனேவந்துகண்டுள்ளவாறுனாத்தனர்குளிர்ந்தான். *

அன்றுதானெழிற்சிகரியினருகில்வேலணிந்து *
நின்றுளான்றனதடிமையும்பொருளெனநினேத்தா *
னின்றுவந்தவன்ருேல்வியுற்ருனம்மூர்க்கேற்ற *
மென்றுமெண்ணினனதற்குளவ்வேதியனேய்ந்தான். *

வேறு.

வரலுமந்தவேதியனுக்கரசன்செங்கைமலர்குவித்த
னுபசாரமலியச்செய்தான், புரவலர்தாங்கொடுத்தவிரு
தனேத்தும்பார்த்தான்பொருத்தமுறுமிடமமைத்தான்பு
சிப்பவெல்லா, மரண்மனேயிலிருந்தனுப்பச்சொன்னுன்
வேண்டு மவையுதவத்தக்கோனாயருகிற்சேர்த்தா, னுர
னுறுபாவலர்க்கிடியேறனேயான்கண்டுள்ளுவகையுற்று
வந்தவிதமுனாத்திட்டானே. (உரு)

கேட்டலுமன்னவன்மனந்தோய் வருத்தமோர்பாற்கிட
க்கமுன்ஞேர்வழக்கமெனுங்கிளர்ச்சிக்கஞ்சி, நாட்டரசு
ர்க்கொத்தபடிநடப்பேனென்ரு னலமெனக்கொண்டின்
றலதுநாளேக்குன்னூர்க், கூட்டமுடனவனேயும்வைத்
தென்றன்கல்விக்கொற்ற மறியெனப்பெயர்ந்தான்கூடப்
போய்மீண், டோட்டமுதுண்டொருவனாயுந் துணைக்
கொள்ளாற்கிவ் வுறுகணுற்றதென்னெனச்சற் றுடைந்
(உசா)
தானப்பால்.

தன்னதரண்மனேவாயிற்புலவன்றன்னேத்தனியழைத்
திப்பாவலவன்றன்மையாது, நின்னறிவிற்ருேன்றியவா
றுணாத்தியென்ருனெடுநாளாக்கேள்வியிவ னிலத்திற்ப
ல்லோ, ரின்னலுறச்செவியறுப்போன்ருனேயென்ரு
னிவ்விடத்தோன்றன்மையென்னென்றிடலுமின்ஞேன்
சொன்னயமாதியபொருந்தப்பாடுவோனே தோல்விவெ
(உஎ)
ற்றிதெய்வபலஞ்சொல்லேனென்ருன்.

நின்னுரமியாதெனக்கேட்பவிருவேழத்தினெடும்போ
ரினிடைக்கொதுகைநேர்வேனென்ருன், பன்னுமொழி
கேட்டுமெய்கண்டுவகைகூர்ந்து பரிந்தவஞே டமைச்சு
முதற்சிலனாயேவி, மன்னுபுகழருணகிரிநாதன்றன்பா
ல்வணக்கமுடனடந்தவிதம்வகையாய்ச்சொல்லி, யென்
னுதவிவேண்டுவதியாதென்னக்கேண்மின்னெனவனுப்
(உஅ)
பியரண்மனேக்குள்ளேகினுனே.

வேந்தனுரைகேட்டவர்தாஞ்சிகரிக்கேகிவிளம்பும்வ
ண்ணம்விளம்பவந்தமேலோனன்று, சாந்தமனஞ் சிறி
துகோதிப்பெய்தியென்றுந் தமியேனுக் குதவிசெய்யத்
தக்கோனென, சேந்தனுக்குமவன்றமையன்றந்தைதாய்க்
குஞ்செபிந்தமற்றப்பரிவாரத்தெய்வங்கட்கும், போந்த
வுபசாரமிகச் செய்வித்தோரம். புகலாமற்பொதுவாதல்
போதுமென்றான். (௨௯)

அம்மொழிகொண்டவருணைக்கவரசன்கேட்டானதிவி
யப்புற்றபிவோமென்றடுத்தநாளிற், செம்மொழியாகம
விதியாலபிடேகாதிச்சிறப்புமிகச் செய்வித்தான்சிகரிக்
கேகி, மெய்ம்மொழிச்செந்தமிழருணைநாதன்முன்போ
ல்வெறுத்துரையாதுபசாரம் விளம்பப்பெற்றா, னெம்
மொழிக்குமிசைந்தமறு மொழிதான்சொற்றா னீட்டமு
ற்றுமோவியம்போலியங்கக்கண்டான். (௩௰)

தக்கவரையனுப்பியிதேதருணமென்றுசாருவபூமனு
க்குரைத்தான்சரபந்தன்னைக், கைக்களிறென்றெண்ணரி
யதோர்மடங்கல்போலக்கடுகிவந்தான் வரும்வழியிற்கா
ண்பாரெல்லா, முக்கணர்தந்திருக்கோயிற்சிகரிக்காவ
ன்முருகோனையருணகிரிமுனியைவேந்தை, யக்கவிஞ
ன்றனைவினையைக்காலந்தன்னை யாதரவாக்கொண்டுபல்
வாறறைந்தார்மாதோ. (௩௧)

வந்தவனையரசனமைச்சாகியோர்போன்மாதவத்தால
ருணகிரிவரன்பேர்வாய்ந்தோ, னந்தணனென்றிடுமுறை
யாலுபசரித்தானருந்தவனென்றவன்மதியாததட்டிப்பே
சிச், சந்தமொழிந்தனையெனக்கேட்டிங்குவந்தேன்சாற்
றுகென்றான்சாற்றுகின்றேன்றடையொன்றில்லை,வெந்த
றுகண்கொள்ளேன்மின்னெனமுன்சொல்லிவிகடபரிம
ளமெனும்பாவிளம்பினானே. (௩௨)

கோடையிடியிடித்தாற்போன்முழக்கங்கொண்டான்
கூறிமற்றோர்கவிதொடுத்துக்கொள்ளுமுன்ன, மாடை
யம்பொற்பணியாதியணியுமற்றோ னவையறியவிக்கவி
நம்மட்பக்காரன், சாடையினிற் சொல்லிடுவானென
நாடோறுந்தலைக்கேறுமாணவத்தாற்றவறிச்சொன்னான்
மாடைமலையனையபுயத்தரசன்கேட்டிம் மாற்றமியல்பல்
லவென்றான்மயிலோனன்பன். (௩௩)

கண்கணெருப்பெழச்சினந்தக்கவியைநோக்கிக்கழ
றுமொழியிதமறியாய் கவியென்சொல்வாய், வண்கவி
தைநீயுரைப்பதுளதோவென்றோர்மசகமெனமதித்தான
ம்மட்டின்மன்னன், றிண்கழற்காலியானையெனவெழுந்
துநின்றுசீரியநீரிவ்வணம் போர்செயனன்றல்லப், பண்
கவிநூலொருவர்சொல்லவொருவர்கேட்டுப் பயனுணரக்
கவேண்டுமெனப்பகர்ந்தானன்றே. (௩௪)

மூன்றனிலேழெழுவர்கலகந்தீர்த்த முழுப்புலவனை
ருகினின்றமுறைகுன்றுமற், றன்றவாற்குழிப்பெடுத்
துக்கொடுத்துச்சந்தத்தமிழ்பாடச் சொல்லியன்னோர்த
ரங்காட்டிலன், மன்னனிவ்வாறுசொல்லப்பெற்றுரவ்
வூர் மாதவன்பாட்டுரைத்திடவாய்திறந்தான்வந்தோன்,
பின்னாலேபொருளுரைத்தான்றுவக்குமந்நூல்பேசுகவி
பாதியின்மேற்பெயர்ந்ததம்மா. (௯௫)

கந்தரந்தாதியினியமகக்கவியோர்நூற்றிற்கழறுமை
ம்பதாயபின்னர்கருத்துட்கொண்டு, னொந்தருணகிரிநா
தன்முருகவேலைநோக்கினன்றிதத்தவென்றுவலோர்பா
டல், வந்தொருவருக்கத்தாலருத்தஞ் சொல்லமாட்டா
மல்வேதியன்றன்மாழ்கிச்சோர்ந்தா, னந்தகன்போற்ப
ற்பலர்காதறுத்தபாவமமைந்திந்நாளெனக்கெனச்சொ
ற்றன்மைதீர்ந்தான். (௯௬)

மன்னன்முதற்பலருமிவன்காதுகொய்தல்வழக்கென்
றருணகிரிவண்மைப்பேரோ, னென்னபயன்கொய்தத
னற்கொய்யாவிட்டாலியான்கொடுத்தகாதெனப்பேசிரு
க்குமென்று, னன்மொழிகேட்டெவரு மதிசயித்தா
ரந்தணனுங்களிகூர்ந்தா னவன்கைவாளைப், பின்னமற்
றேனுனக்காகாதென்றுவாங்கிப் பிரபுடதேவனுக்களித்
துப்பேணினன்றனே. (௯௭)

வேதியன்போன்மாதவன்றன்றோல்வியுற்றால்விடமா
ட்டான்செவியறுத்தேவிடுவானென்றுங், கோதினர்பற்
பலரவனவ்வொருபாட்டிற்குமுரைகேட்டுக்கொண்டுமு
ற்றுமுரைத்தபின்னர், நீதிவழியுரையெழுதிமுடித்தோர்
பாட்டுநிகழ்த்தினனருணேசனென்னச்சுட்டிக், தீதில்க
விக்கடலேழுங்கடந்ததென்றுஞ் சிந்தைமகிழ்ந்தேமெ
னவுந்திகழமன்னே. (௯௮)

அருட்பேற்றினருணகிரிதுவக்கும்பாடலானந்தம்வி
ளைத்ததனையடக்கிக்கொண்டே, யிருட்கோரத்தாலிகழ்
ந்தபடியாலன்றேனிறுமாப்புங்கொடுவாளுமிழந்ததன்
றிப், பொருட்கூறிப்புலமையில்லையென்னுஞ்சொல்லு
ம்புந்தியினிற்றோன்றுமற் போயிற்றேனுந், தெருட்சி
றோனதலினற்றோல்வியேற்றுச் சிரங்குனிந்தானப்பெ
ருமைசிறிதன்றம்மா. (௯௯)

இருவர்களும்வண்ணநல முணர்ந்தோர்கூட்டத்தேற்
றமுற்றோராயிருந்துமிகலிக்கொண்டு, பொருபுலவர்பா
டலதேயென்றுமுன்னூல் புகன்றிருந்தும் வாளுமதன்
பொருத்தமாயு, மருமலிவெண்டாமரையாளையனுவி
ல்வந்திருந்தவ்வாறுரைத்துமாற்றுநீராற், றிருவருளின்
செயலன்றிச்செயலொன்றில்லைத்திறத்தையெளிதுணர்
ந்துகொள்வார்சிறந்துள்ளோரே. (௱)

பொல்லாவனென் றிடும்பெயர்போயருணைநாதன்புகழி
ருக்குமட்டழியாப்புகழ்ச்சீர்தோய்ந்து, வல்லாண்மை
வேதியன்றன்னூரிற்சென்று வாழ்ந்திருந்தா னிக்கதை
யிம்மட்டிற்சொற்றேனெல்லாருமத்தவத்தோன்றன்னை
மெச்சுமியல்புசகியாதழுக்காறெய்திவாடி, யில்லாதப
கைவிளைத்தசம்பந்தாண்டா னெனுமொருவன் றன்னை
வென்றறியம்புவேனே. (சக)

வில்லிபுத்தூராழ்வார் கலகச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

௨

முருகக்கடவுடுணை.

சம்பந்தாண்டான்விகாதச்சருக்கம்

மன்னவர்வணங்குஞ்சீரோன்மந்திரம்பெரிதுகற்றோ
னன்னவாகனனேபோலுமருகனுக்கடிமையானோன், ப
ன்னருந்தமிழ்ச்சொற்சாரம்பதிந்திடா மனத்துப்பாவி,
தன்னகமண்டகோளந்தனில்வளர்சம்பந்தாண்டான். (க

பெற்றவர்தமக்குமீளாப்பெருநரகளிக்கும்பெற்றி,யு
ற்றவனிரட்டையார்தமொருசிறிக்கவிதையோது, மற்ற

வர்தம்பான்மன்னுமனுக்கொளவசியச்சொன்னோன், கு
ற்றமிலருணையூர்க்கோர் கோதெனக் குடிகொண்டுள
ளான். (௨)

மற்றையர்புகழ்ச்சிகேட்கின்மனமிகவருந்துந்தீயோ
ன், பற்றைவென்றவர்க்குஞ்செஞ்சொற்பாவலர்தமக்கு
மாகான், பொற்றைபோற்பொலிந்ததேகன் பூருவப்பய
னியாதாலோ, கற்றையங்குழற்பிராட்டி கருணைநற்பெ
யரோடுற்றான். (௩)

உள்ளியின்றளைக்குநாம முயர்மருக்கொழுந்தென்
றோதி, யெள்ளிடற்கரியசவ்வாதினைமிகப்பூசல்போலத்
தெள்ளியகுரவன்பேருஞ்சிறப்பளையருளுந்தோயத், த
ள்ளிடுஞ்சமணப்பாவிதனக்கயனமைத்திட்டானே. ச)

சமணனுமவன்மு ன்னாளிற் றன்னெறித் தலைவர்தம்
மைத், தமரொடுகழுவிலேற்றிச்சைவரைப்புரந்துவான்
றன், விமலமாந்திருப்பேர்கொள்ளன்மெல்லியமேடக்க
ன்று, சமரவல்வேங்கைநாமந்தனைக்கொளல் போன்றத
ன்றே. (௫)

தன்னுடைக்கணவன்றன்னைத்தணந்துமற்றொருவன்
றன்னாற், பன்னுசீர்மகவும்பெற்றாள் பழைய மங்கலங்
கொண்டாற்போன், மன்னுசாத்தேயனாகி மனக்களிப்
படைந்துமன்னோன், முன்னுளசமணமார்க்கமுறைப்ப
டிநடித்தான்மன்னோ. (௬)

அறங்களின்முயன்றிடாமலலகையூட்டாதிசெய்வோ
ர், பிறங்குபொற்கிழிபெற்றுற்போற் பெரியரைப்பேணி
டாமன், மறங்கொள்வானுகுமன்னேன் மலைமகண்மலர்
க்கண்ணூடுங், திறங்கொடுபுவியிலியாருந் திடுக்குறத்தி
கழ்ந்தானந்தோ. (எ)

சிந்துரந்திருநீறிட்டுச் சிவபிரான்மகிழ்ந்துநோக்கு,
மிந்துநேர்முகத்தெம்பாட்டிக் கினியதொண்டியற்றிலா
னல், வெந்துறுகுணத்தைநீக்கிமெய்யுணர்வளித்திலா
டான்,வந்துறச்செபித்ததாயமந்திரப்பலன்மட்டீந்தாள்.

எத்தனைபேறுநல்குமெழிற்பரையருள்விலாச, மத்த
னைதானென்றெண்ணியளப்பருங்களிப்பனானன், புத்த
மிழ்துதவுந்தீம்பாற்புணரியைப்பூனைகாணின், மொத்த
முங்குடியாமுன்னந்திருத்தியின்முழுகுமாபோல். (கூ)

அன்னவனவ்வூராளு மரசனுமதிக்கப்பெற்றுத், தன்
னலங்கருதிவாழ்வான் றமிழ்ப்பெருஞ் சிறப்புவாய்ந்த,
தென்னனாட்டாழ்வான்மெச்சுந்திறத்தினனொருவன்கோ
யின், முன்னமர்ந்திடக்கண்டியாரு மொழிபுகழ்சகியா
னானன். (௰)

தினந்தரைபுரப்போன்றன்பாற் சிகரிமா முனிவன்சி
லை, மனந்தனின்மதிக்கொண்ணாத வண்ணமிக்குரைத்

துவந்தான், கனந்தனைப்புரையுமோரைக்கவிபொழிந்தி
டலுங்காதைச், சினந்தறுத்திடவந்தான்றன் செவிபுரந்
தருங்கண்டோனல். (௰க)

மற்றவன்கரத்துவாளைவாங்கினேன் வைத்துக்கொள்
ளா, துற்றதன்கரத்தினல்குமுணர்வையுமுன்னியுன்னி
ப், பற்றணுவளவுமில்லான்பகையிவற்குளதென்றோர்ந்
து,நற்றலையசைத்துக்கேட்டுநாட்சிலகழித்தான்மன்னே.

அவனழுக்காறுகண்டுமெம்பிகையருட்சேர்க்கஞ்சிப்,பு
வனியையாளும்வேந்தன்பொதுப்படவிருந்தானன்னே
ன், கவனமோர்சிறிதுகற்றகள்வனுட்கருத்தோராமற், ற
வனெனக்குறித்தாய்தெய்வத்தன்மை காட்டிடச்சொல்
லென்றான். (௰௩)

என்றலுமரசனென்றற்கிருவருமினியர்தாமே, புன்ற
கையினனென்றியாரைப்புகலுவேனென்றான்கேட்டு, ந
ன்றலதுயர்ச்சிதாழ்ச்சிநாட்டினிலறிந்துகொள்ளல், கு
ன்றநேர்புயத்துமன்னர்குலத்திநுக்கடுத்ததன்றே (௰ச)

இன்னமும்பலனைக்காண்பா யாவருமுயர்ந்தோர்தா
மென், றன்னவர்க்கெல்லாநீயோ ரடிமை யொத்தடங்க
லாமோ, வுன்னதுகுலத்துள்ளாரு முலகரு மதிப்பார்
கொல்லோ, வென்னவிவ்வண்ணம்பல்வாறிசைத்தனனி
சைந்தான்மன்னன். (௰௫)

தந்திரங்காலநோக்கஞ்சமையமாதியமுற்றோர்ந்த,ம
ந்திரிதன்னைக்கோயில்வாயிலின்வடபாற்கேவிச், சந்திர
ன்றரித்தவேணித்தலைவனார்மதலைக்கான, வந்தியன்றன்
பாலிந்தவாறுணர்த்திறைஞ்சச்சொன்னான். (௰௬)

அவ்வமைச்சாங்குற்றன்போடந்தமாதவனைப்பேணி
மௌவலந்திண்டோண்மன்னன்வாழ்வினுக்கிறுதிகொ
ல்லென், னெவ்வமுற்றிடைந்தவாறு மெண்ணமுமிறு
மாந்துள்ள, வெவ்வரவனையான்செய்தவிதங்களும்விரி
த்துவீழ்ந்தான். (௰௭)

தெண்டனிட்டவனைநோக்கிச்செழுந்தமிழ்க்கடலே
யன்னான், விண்டலம்புரந்தவேலோன் மேவலிச்சிகரி
தானே, மண்டலத்தெண்ணில்கோடிமலைகளுண்டவற்
றூடொன்றிற், றெண்டர்பற்பலர்கொண்டாடத்துதி
த்துயப்போதுமென்றான். (௰௮)

கேட்டலுமழுதுகெஞ்சிக் கேடெனக்கிதில்வேறில்
லை, நாட்டரசனுக்குமுன்போய் நானிதைநவின்றாலெ
ன்னை, வீட்டலுஞ்செய்வானென்னவெருண்டனனிரங்
கிச்செவ்வேட், காட்டலுக்கிசைந்துநாளுங்கவினுறுந்
தலமுஞ்சொற்றான். (௰௯)

புன்மையோர்சிறிதுந்தோயாப்புலவன்வாய்ப்புதுச்
சொற்பெற்ற, நன்மையாலமைச்சனார்வாளிர்கடன்மூ

ழ்கிமீண்டு, வன்மையோர்க்கியமன்போலுமன்னன்மு
ற்குறுகிவாய்ந்த, தன்மைமுற்றுணர்க்கும்போதுசமண
னாங்கிருந்தான்சாற்றும். (௨௰)

அவனயிற்குமரன்றன்னையழைக்குமத்தினத்தின்மு
ன்னா, னுவகையோடுமைமையைநீகா ணுறப்புரிந்திடுவே
னென்றான், றவன்மொழிந்திடலுமற்றோன்சாற்றலுங்க
ருதிமன்ன, னிவணமக்கெய்துங்கொல்லோ வெனக்க
ளித்தையமுற்றான். (௨௧)

அண்டரோர்புரக்குஞ்சேந்தனடிமைதான்சொலுமீமொ
ண்கான், மண்டபத்தீசானத்தின்மன்னுதூணதனைச்சா
ர்ந்துஞ், சண்டனேரமணன்சொன்னதலத்தினுந்தனி
ச்சீர்ப்பந்தர். குண்டம்வேதிகையொப்பாய் கோலமிக்
கமையச்செய்து. (௨௨)

வேண்டுவபிறவுஞ்சேர்த்து விழித்துயில்வின்றிவேந்
த, னாண்டுவரிதழார்போகமொப்பனைகைப்பவோர்வா,
றுண்டுசின்னாளும்பன்னாளாகவீற்றிருந்தான்றனா, மூ
ண்டுமுற்பகைசெய்திட்டோன் மொழிந்தநாளுதித்தக
ம்மா. (௨௩)

வேறு.

அந்தநாளுதித்தலுமவன்விதிப்படியம்பிகையருட்
கோலஞ், சிந்தனைக்குள்வைத்தோமமாகியபலதிருச்
சடங்குகள்செய்தீண், டிந்தவேளையிலரசனுமறியவந்

திலங்கெனப்பலவாறு, நொந்தயர்ந்தவமிளமூத்தொரு
மூன்றையுறுவன்றசைவறநின்றான். (உச)

அத்தினத்தெழிலருணை நாயகன்பெயரமைந்தவனயி
ல்வேலைத், தத்தியம்புரிந்தின்றவன்மொழிப்படிதுலங்
கிடாதருளென்று, பத்தியான்மிகப்பணிந்துகெஞ்சின
ன்சமர்ப்படுகளத்தொப்பாரி, வைத்திருக்குமஞ்ஞான
ம்விட்டனனதுவம்பலமுறைதானே. (உரு)

அடிமைவேண்டலுமறுமுகக்குருபரனம்பிகையெ
னுந்தாய்தன், மடியின்மீதுசென்றிருந்தனனன்னவண்
மனமுழுதுவப்பாகும், படிபல்லாயிரமாடல்கள்பயின்
றனன்பரிந்தழைப்பவனோடு; வடிவுகுக்குமமாக்கொடு
தோன்றியென்மதலையாற்றடைப்பட்டேன். (உசு)

இன்று நீயழைத்திடிற்பிறர்காணவந்திலங்கிடேனெ
னச்சொன்னாள், கன்றுதன்மையனாகினன்வெயர்த்தன
ன்காவலனெதிர்நாணி, நின்றுகூறினன்றவத்தினரறியு
மந்நிச்சயந்தனைக்காணா, னென்றுபொய்த்ததுமற்றதெ
ன்னுங்கொலென்றுளத்தினுட்டியருற்றான். (உஎ)

ஊருளோர்சிலர்திருடனென்றிகழ்ந்தனருண்மைதா
னெனக்கொஞ்சப்பேருணாத்தனரப்படியாகிலப்பெரிய
வன்றவமாய, சீருயர்ச்சியன்றேவெனச்சிற்சிலர்செப்பி
னரதைநாளைப், பாருமென்றனர்சிலரிவ்வாறளப்பரும் (உஅ)
பலவிதர்ப்பகர்ந்தாரோ.

அங்குதலினுயிர்விடுப்பதற்கஞ்சியவமணனுள்ளவ
மானம், பொங்குகோபமுற்றிடும்படிசெயவவன்புரவல
ன்றனைநோக்கி, யிங்குன்மந்திரியிடத்திலென்னிகலவ
னியம்பியபடிசெய்யின், மங்குறுமலைச்சாயையிற்கப்பு
ம்வசிப்பனென்றனன்மன்றே. (உகூ)

அன்னமும்புனலும்புசிப்பிருந்தவாறவன்வலிதம்மாற்
றனு,சொன்னபின்பனைகழல்பணிந்திகலவன்சொல்லிய
படிநாளை,வன்னமாமயிற்குகன்வராதருளெனவருந்திய
ன்னவட்கான, நன்னயத்துபசாரமிக்கியற்றிடனண்ணி (௩௰)
னன்மனைபுக்கான்.

ஆயவன்புகழ்போயதுபோற்பக லகன்றதன்னவன்
கொள்ளுந், தீயவாணவம்போலிருள்செறிந்ததுதிருப்
புகழ்மிகப்பாடும்,வாயனார்வழுந்திடுக்கழுமருவினன்ம
ன்னரண்மனைக்கேகிக், காயமுஞ்சலித்துறுகணோடை (௩க)
யமுங்கலந்தநுபவித்தானே.

அருணையூரின்மட்டவ்விராவொருயுகமாகிகழ்ந்ததனிற
யில், வருணமாமணிமரகதநிறப்பரிமன்னியபெருந்தே
ரோன், பொருவின்மண்டபத்தூணினில்வேலவன்பொ
லிதருந்திருக்காட்சிக், கருகரியாரெனப்பார்க்கவந்திட (௩உ)
லெனவவிர்ந்தனன்குணதிக்கில்.

மன்னனாகியரியாவருமவ்வயின்வந்தடைந்தனர்வான்றோய், பொன்னங்கோபுரத்தருந்தவன்முழுகினன்பொடியணியுடன்முற்றுந், துன்னவந்தெழிற்காவணம்புகுந்தனன்சூழவேழ்திரையிட்டான், பன்னருங்கிரியாவிதிப்படிமிகப்பரிந்துபூசனைசெய்தான். (௩௩)

முந்துநாட்டனைக்தடைசெயுமுருகனைமொய்குழன்முகில்சாரு, மிந்துநேர்முகத்தம்பிகைமடியில்வைத்திளியவாசகங்கூறிப், பந்துநேர்முலைப்பால்வலிதுதவினள்பரிந்துவந்தருளில்லா, ளைந்துமுவிருபொறியையுங்கருதியுண்ணோக்கமுற்றதுகண்டான். (௩௪)

மயிலைவேண்டினன்மனங்கசிந்துருகினன்வகுப்பினாற்றுதிசெய்தா, னயிலினோடுவற்கொணர்தியேலுயிர்விடேனசத்தியமலவென்றான், கயிலைமால்வரைச்சாரலிற்றிரிவதுகருத்தினாலுணர்ந்தாங்குற், றொயில்குலாவியநடம்புரிந்தகவியதுமையவள்களிகூர்ந்தாள். (௩௫)

நீலகண்டமுநெடியபாம்பணிகளுநிருத்தமுமதுகாட்டக், காலகாலன்மேனினைவுவந்தெழுந்தனள்கருநிறச்சமணன்றான், மேலனன்னவள்வசத்துறலறிதலுமிகமெலிந்தவடன்னைச், சாலவேண்டுதன்மறந்தனனாயவத்தன்மையிலன்றே. (௩௬)

அவன்விருப்பமொத்ததுசெயல்விடுத்தனளன்னவளதனாலே, தவமுனாண்மிகப்புரிந்துளாரவரவர்தாம்வணங்கிடுந்தெய்வங், கவனமூடுதித்தாயிரமுறுதிகள்கழறினுமிறுமாப்போ, டுவகையுற்றிடாதையமுந்துயருமுற்றுருகுவருலகத்தே. (௩௭)

தெய்வமப்படிநம்பியபேர்களைச்சீரழித்திடமாட்டாதுய்வதற்குமெய்ப்பத்தியிற்கருமமேயுயர்ச்சியென்றிடிலவ்வா, றெய்வதுண்டுமென்றுரைத்தனர்மேலவரோன்றகூலியின்வேலை, செய்வதுஞ்சிசுவாதலும்பகரிருதிறத்தினுக்கிணையாமே. (௩௮)

முக்கணன்றனையவணினைந்தெழும்படிமுடிந்தவாறிலையேனுங், கைக்கணிந்தவேலாயவள்குகனிடங்கவின்றதுமெய்யாமா, லெக்கணத்தினிற்கருதினும்வரத்தகுமிருந்ததெவ்விதத்தாலோ, வக்கலாபியைநேருமைமடியைவிட்டணிமயிலிவர்ந்தானே. (௩௯)

வேறு.

ஏறியதுந்தூணிடைவந்தெய்தியதுமொருகணமென்றியம்பவந்தான், வேறிணைதீரருணகிரிநாதனந்தக்கணத்தின்மிகவெதும்பி யேங்கிக், கூறியபோதெதிர்வருநீயின்றெனக்கு வருத்தமிகக் கொடுத்தாயென்றான்,

றேறிடத்தேற்றினன்றெளிந்தான்றிருவுளத்தின்குறிப்பு
(௪௰)
ணர்ந்துதிரையைநீக்கி.

வெளியில்வந்தான்சலிப்புற்றும்வெருட்சியுற்றும்ப
ற்பலர்தாம்விலகிப்போயு, மளிமலிதார்ப்பிரபுடதேவனு
க்கடுத்துநின்றசிலரங்குவீசு, மொளிசகியாதவசமுற்றா
ரவனொருவன்மணிமுடிமீதுறுங்கையோடு, களிசிறப்
பநிற்கைகண்டானிவன்றவனன்றாகுமெனக்கருதிச்சொ
(௪௧)
ல்வான்.

நின்பார்வைக்கடங்காதுநெடுவேலான்றிருவுருவினி
லவுங்காட்சி, யென்பார்வைக்கெய்துவதோர்காரணத்
தாலந்தவிதமியம்பொண்ணாது, பின்பார்வைக்கொருக
ண்வைத்துமற்றொன்றாற்பாரொன்றான்பேசாதுட்போய்
த், தன்பார்வைக்கண்ணிரண்டுங்கொடுபார்த்தான்பே
(௪௨)
ராசைதழைத்ததாலே.

கண்டுதொழுதிருவிழியும்பறிகொடுத்தானானாலுங்க
ருத்தூடன்னேன், வண்டுவர்ச்சீர்த்திருவுருவுமணிப்ப
ணியுமயின்முதலாவனவும்வந்து, மண்டுதலிற்களிப்பு
ற்றான்மாதவத்தோனறிந்துருகன் மலர்த்தாள்பேணித்,
தொண்டுசெயவல்லான்கண் கெடலாமா கொடுத்திடெ
(௪௩)
னச்சொல்லிபொந்தான்.

செவ்வேற்கைக்குமரகுருபரமுருகனருள்கூர்ந்துதி
ரடோள்வேந்தற், கவ்வேளைகண்கொடுத்தானருணகிரி
யுள்ளத்தோவணிக்கம்பத்தோ,மைவேட்குஞ்சிகரிநெடு
மாடத்தோபற்பலவாமலையிலேயோ,மெய்வேதச்சிரத்தி
லோவாகமத்தோயாவினுமோமேவலுற்றான். (௪௪)

மன்னருணகிரிநாதன்றனையுமத்தாணிடத்தினிதுவ
யங்காநிற்குஞ், சின்னவடிவுடைக்குமரன்றனையுமினி
திறைஞ்சியினிச்செய்யுமாறிங், கென்னவென்றான்றவ
னிதனையொட்டியொரு திருக்கோயிலியற்றி யப்பாற்,
பொன்னவிர்கோபுரமதிளாயிரக்கான்மண்டபமுதற்செ
(௪௫)
ய்போதுமென்றான்.

ஆனந்தமுகமலர்ச்சியுடனிசைந்தானிச்சம்பந்தா
ண்டானிங்கு, நானன்புசெய்தாலுங்குடியிரானவன்சப
தநவின்றுள்ளான்மெய், வானந்தோண்டுதற்றுவக்கப்
போகின்றேன்மதிட்குளவன்மனையுமாகா, தீனஞ்செய்
வானிருந்த தலத்திலென்னசெயலாகுஞ் செப்புகென்
(௪௬)
றான்.

அந்தமொழிகேட்டருணகிரியுரைப்பானவனையவம
திக்கவேண்டாங், கந்தமலர்க்குழலுமையாளடிமைதா
னழுக்காற்றாற்கனற்கோபத்தாற், செந்தகையபுகழிழந்
தான்வேறுமனையமைத்தாலுஞ்சிந்தையொப்பா, னெந்

தவிதம்போனாலும் போகட்டும்வாவியொன்றாங் கியற்றென்றோதி. (௪௭)

புரவலனையனுப்பியப்பாற்றான்வசிக்குங்கோபுரத்திற்புக்கான்மன்னன், பரவசந்தீர்ந்தெழுமமைச்சனாதியோரோடுவகைமொழிபகர்ந்துபோய்த்தன், னரண்மனையிற்புகுந்துடனே களஞ்சியத்துப்பொருளையெல்லாமள்ளிச்சிறப்பத், திரமுணர்வார்முதலோர்க்குக்கொடுத்தரியதிருப்பணிகள்செயச்சொன்னானே. (௪௮)

எற்றுநூற்காரரொட்டர்கற்றச்சராதியரோடிகல்வேந்தேவப், பெற்றுளசேவகர்பலர்க்கு வெவ்வேறுமனையமைத்துப்பெயர்ப்பதன்றிச், சுற்றுமதிட்காரம்பஞ்செய்வதுவுங்கண்டமன்னன்றானுக்கமுற்றான், மற்றுளமாவிடர்பலவாறருணகிரிதனைப்புகழ்ந்து வணங்கினாரோ.

தன்றோல்வியறிந்துமந்தச்சமணர்பிரான்மன்னனிடந்தனித்துப்போய்முன், னின்றோதுமென்னவித்தையவன்செய்தானரண்மனையி னிறைத்துவைத்த, பொன்றோற்கத்துணிந்தனையே தூணினுக்குங்கோயில்கட்டல்புவியிலுண்டோ, நன்றோதலறிதியென்றானறியாதிந்தவிதநடத்துவேனோ. (௫௰)

என்றுரைத்துமன்னனெனக்கையமில்லையுனக்கையமிருக்குமானாற், சென்றுணர்ந்துகொள்ளெனவுஞ்செ

ப்பினானப்படியேசிகரிக்கேகி,நின்றுபலநிந்தைசெய்தான்கேட்டருணகிரிநாதனேரில்வந்தா,னன்றுவிண்ணோர்த்தருமலரைக்கொணர்தியென்றானரசனும்போய்நடுவனானான். (௫௧)

நல்லரசைநோக்கியந்தநாத யிற்குருபரனைநம்புமன்பர், வல்லமைதேர்ந்தறியாவிவ்வம்பன்மொழியையநின்பால்வருத்தலுண்டேற், சொல்லமரர்தம்மூரின்மலர்கொணர்தியெனநீயுஞ்சொல்கின்றாயோ,மெல்லவிவன்சொற்சபதமறந்தவர்போல்விடுத்தனையோ விளம்புகென்று. (௫௨)

வினவலும்வேந்துளநடுங்கியையமெனக்கேதுனருண்மேவப்பெற்று, மெனதுகடனித்ததியில்வரலன்றோவெனப்பணிந்தானிமையார்வாழுங், கனகநகர்த்தருமலருங்காட்டுதுநீயிவன்மனையிற்கவினார்வாவி, புனலொடுசெய்திளையனார்க்கபிடேகஞ்செய்திவன்முன் டநன்றவாறு. (௫௩)

வேறுநகர்க்கேகிடச்செய்விரைவிலென்றானம்முனிவன்விடப்பாம்பென்னச், சீறுசினத்தமணர்தங்கோன்றனைநோக்கித்தேர்வேந்தன்செப்புமன்ன,நூறுதரமிங்கிருக்கச்சொன்னாலும்போவேன்பின்னுவன்றவன்னா, நாறுமலரிவன்கொணருநாளில்வந்து போதன்மட்டினயந்தேனென்றான். (௫௪)

வேறு.

அந்தமொழிப்படியிசைதற்கரசனஞ்சியருளாளன் *
சுந்தரமாமுகநோக்கச்சுகமேயத்தினத்திலிங்கு *
வந்தமிர்ந்துபின்போகுமட்டிலொப்பென்றனவன்றன் *
வெந்தகைமுற்றுணராதவேந்தனுமப்படிச்சொன்னான்

அக்கணமேயவ்வூர்விட்டயலூருக்கவன்போனான், பக்கமொருபன்னிரண்டிற்பார்வேந்தர்பெருமானுந், தக்கபொருட்செலவிட்டுச்சாற்றியவாறவைசெய்தான்,கைக்களிற்றுக்கிளையான்றன்கழல்பணிவான்களிகூர்ந்து. *

திருப்புகழுடவனுமங்கிகழ்தரச்சேர்த்தனனன்றி,மருப்பொலிகற்பகக்காவின்மலர்கொணர்ந்துதருவேனென்றொருப்படுஞ்சிந்தையின்வலியாலொருதினஞ்சுட்டினனதுதான், பொருப்பிலிடும்விளக்கேபோற்புவியெங்கும்பொலிந்ததனால். (௫௭)

அழுக்காறுமலிசம்பந்தாண்டானுமத்தினத்தி *
லிழுக்காயமொழிக்கஞ்சாதெழிலருணையிடத்தெய்தி *
முழுக்காகங்கொக்கிறகான்மூடியிருப்பதுபோல *
வழுக்காயவஞ்சகத்தான்மனத்தைமறைத்திருந்தானே.

அருணகிரிப்புலவோன்பாலடற்சம்பந்தாண்டான்முன், பொருவரியபகைசெய்துபுகழிழந்தவிதஞ்சொன்

னேன், மருமலிகற்பகமலர்க்கம்மாதவன்போயதுமவன்றன், னுருவமழிந்ததுமினிநானொருசிறிதுபகர்வேனே. (௫௯)

சம்பந்தாண்டான்விகாதச்சருக்க முற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

பாரிசாதச்சருக்கம்.

பெற்றிமிக்கபிரபுடதேவன்முன் *
சொற்றிடும்படிதூயவிண்ணூர்மலர் *
பற்றிவந்திடப்பைந்தமிழ்ச்சோணவெற் *
புற்றிருந்தவொருமுனியுன்னினான். (௧)

தன்னுடம்பைத்தனித்திருக்கோபுர *
மன்னுமேனிலைவைத்தனன்மாண்டதோர் *
பொன்னுறழ்ந்தகிளியுடற்புக்கெழுந் *
துன்னும்வானகத்தோடினனோடலும். (௨)

கூடவுற்றகுலக்கிளிபற்பல *
நீடவேகிநிறைவலியின்மையால் *

வாடலெய்திவசிப்பிடத்துற்றன *
பாடன்மிக்குணர்பைங்கிளியொன்றுமே. (ங)

மின்னலென்னவிளங்கெழில்வேலினான் *
றன்னருட்பெருக்கங்கொடுதண்குலாம் *
பொன்னகர்க்குட்புகுந்ததுபோகுமுன் *
னென்னலன்றெரிந்தானுமையோதலால். (ச)

சென்றுசிற்சிலர்திண்டிறன்மன்னன்முன் *
னின்றுனக்குநெடுவிசும்புற்றபூ *
வின்றுகொண்டுவருதுமென்றேகினேன் *
பொன்றுதன்மையடைந்துசொற்பொய்த்தனன். (ரு)

இன்னதானத்திறந்தனனிச்சொன்மெய் *
யென்னவோதிபிறைஞ்சவிடுத்தன *
னன்னசொல்லரசன்செவிக்கங்கியிற் *
றன்னவைத்தசலாகையிற்றேய்ந்தது. (சு)

தொண்டுகொண்டுயர்தூயவன்சொன்னசொற் *
பண்டுபோலப்பலிக்குமென்றெண்ணினேன் *
மண்டுவல்வினைவந்ததுகொல்லெனக் *
கண்டுநொந்திருகண்கலுழ்ந்தானரோ. (எ)

ஆயகாலையிலங்கமணன்புகுந் *
தேயநஞ்சமிவற்கெவர்நல்கினார் *

மாயவஞ்சகனீவைத்திருந்தான்கொலோ *
தூயகோயிற்றொடக்குறச்செய்தனன். (அ)

பொன்றயங்கும்விணூரினிற்போம்வலி *
யென்றனக்கிலையென்றிடநாணினா *
னின்றனேகரிகழ்ந்திடனாணிலான் *
குன்றநேர்புயக்கொற்றவவென்னவே. (கூ)

மன்னைநோக்கியுமற்றுளமன்பதை *
தன்னைநாடியுஞ்சாற்றினன்பற்பல *
வன்னையன்பனகங்களிப்பெய்தவோ *
வென்னைகாரணமோகுகனெண்ணிலான். (ய)

விரிதிரைப்புனல்வேணியன்கோயிலிற் *
சூரியபூசையுஞற்றுநிமித்தமப் *
பெரியவன்றன்பிறங்கெழின்மேனியை *
யெரியிலிட்டனரிப்படியாயபின். (யக)

அங்குதேவரதிசயித்தம்புவி *
தங்குமோர்கிளிதன்னுடலோடுவந் *
திங்குலாவுவதென்னெனத்துன்னினார் *
பொங்குசெந்தமிழ்ப்பாடல்பொழிந்ததே. (யஉ)

வேறு.

பாடலின்பயனுணர்ந்துதம்மூரொடு பரிந்துதம்மை

யுங்காக்கு,மாடல்வேலவனடித்தொழும்புடையதென்ற
றிந்தனரயிராணி, கூடவிந்திரன் கொலுவிருந்திடுமெ
லைகுறுகியோதினரன்னோன், வேடம்வேறெடுத்துற
ந்தவனுமெனவிரகினாலுணர்ந்துற்றான். (௰௩)

வந்துதெண்டனிட்டுபசரித்தழைத்தலு மலைத்திரள்
வலியாவுஞ், சிந்துவச்சிரந்தரித்தகைமிசைவரச் சிந்
தைமிக்குவப்பாகி, முந்துகாரணஞ்சிறிதுகேட்டணி
மணிமுடித்தலைமிசைவைத்தான், பந்துநேர்முலைச்சசி
முதலணங்கினாபிற்பலர்விழைவுற்றார். (௰௪)

கண்டிதோர்கிளிதானெனக்கருதிடிற்கடும்பிழைவரு
ஞான, பண்டிதன்றனதடியருட்சீரியன்பாவலர்களின்
மிக்கோ, னெண்டிசைக்குமப்புறத்தினுநிறைபுகழிசை
ந்தவனெனவஞ்சி,யுண்டிடும்படியமுதமிக்கூட்டியவ்வு
டலுமேம்படச்செய்தார். (௰௫)

கூரிலங்கியகுலிசவேன்மன்னெடு குலவுபைங்கிளி
நாதன், பாரிசாதமென்மலரிலொன்றளித்தெனைப் படி
யினுக்கனுப்பென்று, ணேரிபைந்தவத்தருவிலெக்கால
முமிருக்கலாமெனக்கூறக், காரியஞ்சொலி யப்படிப்
பெற்றொருகணத்தின்மீண்டனன்மன்னே. (௰௬)

இந்தமாநிலங்கருதலுந்தன்னுட லிகலவன்புரிதீங்கா
ல், வெந்தவாறுணர்ந்தொருசிறிதழுங்கினன் வினைத்தி

றன்முதலாமற்றெந்தவேதனைத்தொடர்பையுமொழித்
தருளெளிதினிற்றரவல்ல, கந்தநாயகன்சம்மதமீதென
க்கருதியுங்களிகூர்ந்தான். (௰௭)

பெற்றதாற்களிப்படைவதுமேலவர்பெற்றியென்றிடு
மாற்றா, லற்றமெய்தியவுவகையோடருணையையடுத்து
வந்தனனவ்வூர், முற்றமாமணங்கமழ்ந்ததாலியாவருமூ
க்குணர்ச்சியின்மூழ்கி, யுற்றதன்மையராயினரப்பொ
ழுதுயர்பிரபுடதேவன். (௰௮)

சீயநாலிரண்டேந்தியவாதனந் திருத்திவீற்றிருந்தா
னங், கேயமந்திரியாதியர்சூழ்ந்தனரெழிலவைமிகக்கூ
ட, லாயதஞ்சுகத்துடலினுட்புகுந்தவ னமரரூர்மலரீ
தென், றீயவாங்கினனென்கடன்றீர்ந்ததென்றியம்பிடு
மொழிகேட்டான். (௰௯)

ஐயகோவெனவலறினன்வீழ்ந்தன னருணைநாயகன்
பேர்கொண், மெய்யனோர்கிளியுருக்கொடுவந்துளவிய
னினைத்தெழுந்தானின், செய்பமேனியையென்னிடத்
தளித்திலைசிகரியின்மிசைவைத்தாய், பொய்பர்சொற்ப
டியெரியிடற்கிசைந்தனன்பொறுத்திடென்றிறைஞ்சுற்
றான். (௨௰)

வந்துகூடினர்தமைக்கொணர்ந்தமைச்சதன்வகைசொ
னொவொன்ன, வெந்துகேட்டனன்வெருட்சியாலுரை

த்தனர்விரைந்துவாட்படையேந்தி, புரந்துநீப்பொறியு
டன்விழித்தவன்றனையொறுக்கநாடினன்கண்டு, சிந்து
ரத்தனிவாய்திறந்தஞ்சுகத்திருவுருவினன்சொல்வான்.

என்றனக்கதுமிதுவுமந்நியமதிலிதன்சுமையெளிதா
கும், குன்றமன்னிட்டததனுடன்செலிற்பல குழுவுட
ன்றொழல்வேண்டு,மென்றகைத்திருப்பெறுமிதோடே
கிடில்வியன்கரத்துறலாகுஞ், சென்றவூரமிழ்தயின்ற
தாலிதனிடஞ்சிறிதுமெய்ப்பணுகாது. (௨௨)

இதுவுமிவ்வுடலினமுநல்லுணவலா லீனமுற்றவை
யுண்ணாப், புதுமைதோய்வனவதுவுமுன்னாட்சிலபுசி
க்கொணாதனவுண்ட,தெதுவுமீசுரச்செயலெனிலிச்செ
யலிகலவன்றனதாமோ, மதுவுநாணுறுஞ்சுவைக்கவி
யிந்தவாய்வழங்கிடிற்கசப்பாமோ. (௨௩)

நிதமுமெத்தனைமானிடயாக்கைகணிலத்தினில்விழு
கின்ற, ததனைவிட்டிதையெடுத்தநான்விருப்புறிலவற்றி
லொன்றடையேனோ, விதனமுற்றுள்கிளிக்குழாமுவ
ப்புறமேவுதும்விறன்மிக்காய், கதமுறேலெனக்கழறின
னுடற்றொனிகாட்டியும்பறந்தானே. (௨௪)

மன்னன்றன்றலைவிதியினைப்பழித்தனன்வயிறெரிந்த
னன்வஞ்சந், துன்னவாழ்கொடுஞ்சமணனைவசையடச்

சொல்வதிற்றுணிவுற்றா, னன்னதன்மையேயகிலமுற்ற
டைந்ததவ்வமணனெஞ்சமையானா, யுன்னருந்திறலுக்
கிரகாளியிற்குரியபூசனைசெய்தான். (௨௫)

வேந்தன்றன்குடிகெடுக்கவோவருணையின் வியனழி
த்திடத்தானோ, சாந்தமார்தமிழ்க்கிளியினை யினத்தொ
டுதடியவோ தனையேசு, மாந்தரியாரையும்விழுங்கவோ
காளியைவரவழைத்திடநாடிப், போந்தபூசையிற்செய
த்தகாதனசிலபுரியவுந்துணிவுற்றான். (௨௬)

சருப்புசிப்பவர்சேனைகாவலனொருசத்துருசங்காரத்
திருப்புகழ்க்கவியம்பிகைக்குரையெனச் செழுந்தமிழ்
க்கிளிதன்பால், விருப்புடன்சொலக் கேட்டதுன்றனக்
கலால்விளம்பிடேனெனவேலா, யிருப்புளாத்தனனவ
ண்மகனிவனெனவியம்பியதந்நாளில். (௨௭)

யாளிமீதிவர்ந்தாயிரந்தலையிரண்டாயிரங்கரத்தோடு
வாளிலங்கிய படைபல தாங்கியோர் மலையெனவளர்ந்
தோங்கிக், காளிவந்தனளதட்டினள்பணிந்திலன்கடுக்
கெனத்திடுக்குற்றான், றேளினுங்கொடுங்குணத்தனா
ஞ்சமணன்மேற்சினந்தடித்துயிருண்டாள். (௨௮)

கண்ணிரண்டுநாவொடுமிகப்பிதுங்கினகருங்குருதி
யின்சோரி, மண்ணிலோடிடமலசலங்கழிந்தனவஞ்சக

த்தொடுமொண்டான், புண்ணியத்தினர்நினைக்கரும்வெ
ழிப்புனல்புலைத்தசையிடும்பூசை, பண்ணிடும்பலரிவ்வ
ணமடிவதுபாரினில்வழக்காமால். (௨௯)

அன்றுகண்டவர்கேட்டவரியாவருமவுணராதியபொ
ல்லார், பொன்றுநாளையிலிருந்தவராமெனப்புகலருங்க
ளிப்புற்றார், நன்றுளார்க்கிடையூறுகள்விளைத்திடநாடு
நர்க்கதுதான்வந், தொன்றுமென்பதற்கிதுகரியாகுமெ
ன்றுணாத்துணர்ந்தனர்சில்லோர். (௩௰)

பேட்டுவாலனமனையவர்விரும்புதோட்பிரபுடமகரா
சன், கேட்டுமரமகிழ்வெய்தியெண்ணறுபலகிரிதொறு
நடமாடுந், தாட்டுணைக்குகன்முதலியவானவர்தமக்கெ
லாமபிடேகஞ், சூட்டுமாலைவேதன்மாதியதொகுத்தி
றைஞ்சினனன்றே. (௩௧)

வந்துகோபுரவாயிலினின்றுமுன்வானகமலரொன்று
தந்துபோயினகிளியினையதனது தண்ணருண்மிகையா
ற்கண், டுந்துவன்பகையொழிந்தவாறுணாத்தனனுயிர்த்
திரளினுக்கெல்லா,முந்துநாள்விதிப்படிநடந்திடுமென
மொழிந்தவனுடன்வந்த. (௩௨)

பாவலன்றனைப்பார்த்துமைமகனெனப்பகர்ந்தோர்
கவிசொல்லிற், றுவல்கொண்டெழுதினனினிவந்துவந்

தறைந்தபாட்டெழுதென்ற, தேவலின்படிநடப்பதிற்பி
ழைபடேனெனவிறைஞ்சினனந்தக், காவலன்சொலும்
பெற்றனன்சிறிதுநாட்கழிந்ததிவ்வணமாதோ. (௩௩)

கொற்றவன்றனதருந்தவப்பயனெனக்குலவுபாலகன்
றன்பா, லுற்றதன்னரசுரிமையைக்கொடுத்துவிண்ணூர்
புகுந்தனனன்னோன், மற்றடப்புயவலிமுதற்பகர்நலம
ருவிமாதவத்தோர்க்குங், கற்றவர்க்குமோருயிரெனவி
ளங்கினன்கலிவெருண்டயர்ந்தானே. (௩௪)

மெய்ப்புகழ்க்கடல்விளைக்குமப்புரவலன்விரிகடலோ
ரேழு, மொப்புணாக்கருந்திருப்புகழாதியவுயர்தமிழ்க்க
விகோடி, செப்புமேலவன்கிளியுருக்கொடுதிகழ்சிகரியி
ற்றினம்போய்வந், தெய்ப்புறுமையிற்றுதையிற் சீரிய
னெனும்பெயர்புனைந்தானே. (௩௫)

தேரிலங்கெழிற்றெருவளத்தருணையூர்ச்சிவன்பெயர்
புனைந்துள்ளான், பாரிசாதமென்மலர்கொணர்ந்ததமு
தற்பகைசெடல்பார்வேந்தன், சீரியைந்தவிட்டுறலவன்
மகன்றிறல்செப்பினமினியன்னோன், கூரியற்செரூப்ப
வளவாய்க்கிளிகளிற்கூடிவாழ்ந்தமைசொல்வாம். (௩௬)

பாரிசாதச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுட்டுணை.

கிளிவாழ்க்கைச்சருக்கம்.

குலவுசீர்த்திருவருணைக்கோபுரத் *
திலகுபைங்கிளியினங்கண்டின்புற *
நிலவுமொன்றிறந்துயிர்த்துநேயமார் *
பலவுமஞ்சுறப்பறந்துபோயபின். (க)

அன்றதோடுசென்றயர்ந்துமீண்டவை *
நின்றமற்றவையோடுநெஞ்சழிந் *
தொன்றருந்துதலின்றியோர்தினங் *
கன்றலுற்றபின்காணப்பெற்றன. (உ)

கண்டுகிக்கிகீககவென்றசொல் *
விண்டுசூழ்ந்தனவேலன்றன்னடித் *
தொண்டுகொண்டவன்சூழ்ச்சியான்மிகப் *
பண்டுவாழ்ந்ததிற்பரிவுகாட்டினன். (ங)

மன்னனுதியர்வலிதில்வந்துவந் *
தன்னம்பாற்குழம்பனையவுண்டிதா *
மின்னநீர்ந்துபுநிமித்தமேறவைத் *
தென்னதேற்றதென்றியம்புவார்சிலர். (ச)

சுற்றமோடுதானருந்திற்றாயவர் *
பெற்றநன்மைகள்பேசக்கேட்டுவந் *
தற்றமங்கவர்தமையெலாமறிந் *
துற்றதோர்கிளியதனையோர்கிலார். (ரு)

துங்கவான்மலர்சூடிஞ்சென்னியோன் *
புங்கமார்கவியெழுதும்புண்ணியன் *
றங்களோடுசொற்சாற்றும்போதுவர் *
தங்கண்ஞாலமுற்றவர்களார்வமாய். (சு)

ஐயநீங்குவரடுத்துச்சிற்சில *
செய்யவாய்க்கிளிநெருங்கிற்சிங்கையின் *
மையல்கூர்வநுண்மருவுவான்றனைப் *
பையநாடுறும்பருவமின்மையால். (எ)

தூலதிட்டியிற்சுழன்றிடாதருட் *
பாலதாமனம்பதியும்வேட்கையாற் *
காலநோக்கமாதியகண்டோர்சிலர் *
சாலவீதெனவுணர்ந்துசாற்றுவார். (அ)

சித்தராதியகணத்துட்சிற்சில *
ருத்தமக்குகனருளிலுற்றதோர் *
பக்குன்வாழ்கிளிப்பான்மைகாணுற *
வித்தகத்திருவருணைமேவுவார். (கூ)

இன்னதன்மைகளளவிலாதன
துன்னவாழ்பவற்சூழுமவ்வினஞ்
சொன்னதோர்சுகப்பெயர்க்குத்தக்கசீர்
மன்னலாலுயர்மாண்புதோய்ந்தது. (௰)

வேறுவேறுதாய்விரும்பிப்பெற்றுள
நூறுநூறெனநுவல்வயாவையு
மாறுமாமுகனருளையேமிகக்
கூறுமொன்றுதன்பார்ப்பிற்கொண்டது. (௰௧)

செந்தமிழ்க்கிளியுடம்பிற்சேர்ந்தினி
தந்தநாளையிலிருந்தவாருயிர்ப்
பந்தமேவியும்பசியமாமயிற்
கந்தவேண்மலர்க்கழல்கணுமால். (௰௨)

அரியசந்தவாக்கதிபன்வாழ்தலுக்
குரியமேனியிலுற்றதோருயிர்
பெரியர்வேண்டுசீர்பெற்றதென்றிடிற்
சரியன்றென்பவர்தனைக்குப்பாரமே. (௰௩)

பேடுபார்ப்புமுற்பிறங்குபல்குழாத்
தூடுமேம்படவுறைந்ததோர்கிளிக்
கூடுவாய்த்திடக்கொடுத்துக்காத்ததோர்
வேடுவன்செயல்விரிக்கொண்ணுதரோ. (௰௪)

வேறு.

கந்தனநுபூதியலங்காரமுதலாய
பைந்தமிழ்நறுந்தொடையல்பற்பலவனைந்து
செந்தகையவாய்கொடுவரைந்தசிலபாட
லந்தநகரிற்சிலர்கொடார்வமுறவிட்டான். (௰௫)

நல்லவருடன்பழகின்ஞானமொடுகல்வி
யில்லவருமிக்கநலமெய்திடுவரொன்றுஞ்
சொல்லருணையின்சிகரிதோய்தருசுகங்கட்
கல்லறமுனிந்தகிளியானிசமதாகி. (௰௬)

மானிடவுணர்ச்சியில்வயங்குமகிழ்வெய்திக்
கானிடமலைந்துறுகலக்கமுழுதற்று
வானிடமிருக்குமவர்வாழ்வையும்வெறுக்குங்
கோனிடமியைந்துளகுணஞ்சிலபொருந்தி. (௰௭)

பெற்றவைநினைத்துமகிழ்பேரறிவின்மூழ்கி
யுற்றனவநாளிலவையொத்தவுருவத்தோர்
நற்றவனயிற்படைகொளையகன்வசிக்குங்
கொற்றமலையிற்குடிகொளும்படிகுறித்தான். (௰௮)

அச்சிகரியாலதையடுத்தசிகரிக்கு
நச்சியகிளிப்பெயர்நவின்றிடமிருக்கும்
பச்சிறகுகொள்ளுமவைபற்பலநெருங்க
மெய்ச்சிவனுமங்கிரியின்மேற்றிசையிலுற்றான். (௰௯)

காதலறும்வாழ்வுதவுகந்தனுறைகந்த *
மாதனநெடுங்கிரியின்மன்னியகுவட்டின் *
மீதணுகியங்குலவும்வித்தகர்களெல்லா *
நாதனெனவொப்பவொருஞானவநுபூதி. (௨௰)

வேறு.

பாடினன்கிளியின்செஞ்சொற் பன்னிருசெவிக்கோ
ன்கேட்டு, வாடிடேல்வாவாவென்று வரவழைத்தொரு
வன்சேவ, னீடியபுயத்தினேராநிகழ்வலத்தோளில்வை
த்தா, னாடினர்புலவர்கையா லணிமலர்மழையும் பெய்
தார். (௨௧)

அன்றவனருணையூரிலவதரித்திடுமந்நாளே, யென்
றவேள்கிழமைமட்டி லிரண்டதாமெனவுஞ் சொன்னா,
னன்றதுமாறித்தோன்றனானிலத்தியல்பேயாமா, லொ
ன்றலாற்பிறிதொன்றில்லையுரியசீர்செயவல்லார்க்கே. *

அக்கிளியயில்வேள்பாலுமமரர்கோன்மகடன்பாலு *
முக்கிரக்குறவர்கானத்தொருமடக்கொடிகன்பாலு *
மிக்கினுமினியசெஞ்சொல்லியம்பிமிக்குவகையீந்து *
திக்கினமறியுமுண்மைத்திருப்புகழ்படைத்ததம்மா. *

அப்புறநடந்தகாதையதிற்சிறிதறிந்துற்றுலு *
மிப்புராணத்தினையேனியும்பிடுமியல்பின்பாற்றன் *

றெப்புலவனீக்கம்மேன்மையிசையுமோவறிகின்றிலே
ன்,முப்புரமெரித்தாரீன்றமுருகவேளறியுமன்றே. (௨௪)

யானிதிற்பகர்ந்தவாற்றிற் கிசைந்திடாவிதமுஞ்சில்
லோர். நானிலத் துணைப்பதுண்டுநலந்திகழருணைநாத
ன், கானிடக்குறத்திகோன்றன்கழல்பணிந்துய்ந்தவா
ற்றை,வானின்மென்மலர்கொண்டுற்றவண்மையைமறு
த்திடாரோ, (௨௫)

மருமலரிதழியாற்குமணிவியைவழங்குநீரா,லொருபெ
ருந்தாதையாகியுலப்பரும்புகழ்ச்சீர்தோய்ந்த, வருணை
வல்லாளன்செய்த வணிநெடுஞ்சிகரிக்காவன், முருக
வேளருளாலிந்தமுதுகதைமுடிந்ததன்றே. (௨௬)

பலபலசிகரியோங்கும்படியிடத்தருணையூரி, னிலவு
மொன்றினுக்கிம்மேன்மை நிகழ்ந்தவாறென்னென்றெ
ண்ணும், புலவரும்பிறருந்தேறிப்புகன்றுவப்படைதல்
வேண்டி, யுலகினிற்பழையோர்தம்மா லுணர்ந்தவாறு
ணாக்கலுற்றாம். (௨௭)

கிளிவாழ்க்கைச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

முருகக் கடவுடுணை

கோபுரத்துச்சருக்கம்.

ஆரணிந்தவவிர்சடைத்தம்பிரான் *
சீரணிந்தசெழுந்தழல்வெற்பதா *
மூரணிந்தரசாண்டவருடொரு *
காரணிந்தகைக்காரன்வல்லாளனே. (க)

தருமநீதித்தகைமுழுதுற்றவ *
னிருமடந்தையர்க்கேற்றமணாளன்வேன் *
மருமவீரமகாரதன்வண்டுழாய்க் *
கருமலைக்கிணையாகியகாட்சியான். (உ)

மன்னர்மன்னனெனப்பெயர்வாய்ந்துளான் *
சின்னவெண்பிறைச்சென்னியன்பொன்னடி *
யுன்னலேதவமென்னுமுணர்ச்சியா *
னின்னலின்றியிருந்தரசாளுநாள். (ங)

பாலன்வேண்டும்பருவரலுற்றுளஞ் *
சாலவாடித்தளர்ந்தனன்சந்ததஞ் *
சீலவேதியர்செப்பியவாறெலா *
ஞாலமீதுநடத்தியுநாணினுன். (ச)

சரதமாநிறைத்தையலர்தாமுநல் *
விரதமுற்றுமெலிந்துவெதும்பினு *
ரரண்மனைக்கழகாமொருமைந்தனைக் *
கரகநான்முகன்கைகொடுசெய்திலான். (ரு)

வேந்தினத்தினும்மிக்கவன்றன்னிடம் *
வாய்ந்திடும்பல்வகைப்பொருளியாவையு *
மேந்தியேற்பவர்க்கில்லையென்றேதிடா *
தீந்திடத்துணிந்தானெழில்வாயிலில். (சு)

ஈகைகாட்டுமியற்பறைமோதுவித் *
தோகையோடுமொருகொடிக்கட்டின *
ஞகையாலுளவாதுலரியாவரும் *
வாகைபெற்றுமகிழ்ச்சியின்மூழ்கினர். (எ)

அந்தநாளிலவன்பொருட்குன்றிடா *
துந்தவைத்தனரொண்மழுச்செங்கையார் *
தந்தவேழந்தனைநிகர்மன்னவ *
னெந்தவேளையுமேற்பவையீந்தனன். (அ)

மேலுமேலும்வியன்றிருமிஞ்சுத *
லாலுநொந்தனனுபிழைதன்மூலைப் *
பாலுண்வாய்ச்சிறுபாலகனின்மையிற் *
சாலும்வாழ்வைத்தணந்திடநாடியே. (கூ)

வந்திரப்பவரின்மையின்மன்னவ *
னெந்திருந்தனனூலிடையாளிடத் *
தந்திவண்ணரருண்மலிந்தாடுவான் *
சிந்தியாவொருசீருருக்கொள்ளுவார். (௰)

நிரைந்தமேனியுஞ்செந்நிறத்தானையும் *
வரைந்தபுத்தகம்வாய்ந்துளசட்கமு *
மிரைந்தமூச்சுமிளைப்பும்வெண்பிணாநீர் *
கரைந்தகண்ணுங்கரத்தொருகோலுமாய். (௰௧)

நீறணிந்துநெடுவடத்தக்கமு *
மீறமார்பில்விளக்கிவெயிற்மரும் *
பீறலார்குடைநீழலிற்பேசரும் *
வீறணிந்துளவீதியின்மேவினன். (௰௨)

மங்குல்போல்வழங்கும்வல்லாளமா *
லெங்குளானவனீகைவிழைந்துளே *
னங்குகொண்டெனையார்விடுவாரெனப் *
பொங்குதுன்பினர்போற்புகன்றனரோ. (௰௩)

அன்னமாற்றமறைதலுமங்குளார் *
மன்னர்மன்னவன்வாழ்பெருமாளிகை *
முன்னம்விட்டுமொழிந்தனருட்புகுந் *
தின்னல்கூமியிரக்குமுன்னேசில்கோன். (௰௪)

கண்டுவந்துகரங்குவித்தன்புடன் *
கொண்டுசென்றுகுலமணிப்பீடமேற் *
றொண்டுசெய்பவர்சூழவைத்தென்பணி *
யுண்டுமென்னிலுரையெனவோதினன். (௰௫)

வேறு.

மன்னன்மொழிகேட்டுமன மகிழ்ந்தார்போற்றிருவதவமலர்ச்சிகாட்டி, யென்னதுநெஞ்சகத்துவிருப்பொன் றுளதெந்தமக்காகுமியல்பின்பாற்றன்,றன்னவண்ணம்புரிவாயேற் பகரலாம்பகர்ந்தபின்ன ராகாதென்றியா, வின்னலுறச்செய்வாய்கொ லெனச்சொன்னான்மாலறியாவிருதாட்பெம்மான். (௰௬)

வல்லாளனதுகேட்டிப்பூதலத்திலுள்ளதென்றால்வழங்கச்சோம்பே, னில்லாதபொருளெனினியானென்செய்வேனென்றானவ்விறைவனெங்கு, மெல்லார்க்குமெளிதிலெய்தத்தக்கதேயென்னளவுமிறும்பூதாயிற், றல்லாமலில்லையென்றானரசனின்னேயளிக்குதுநீயறைதியென்றான். (௰௭)

ஈதுமெனச்சொன்னமொழிவினவியந்தக்கிழமுனிவனியாதோவென்ன, நீதுயருற்றிடவேண்டாமொருமடவாளின்பாலநினைத்தேனோர்நாட், போதுமென்றானுட

னையனெற்றார்களையனுப்பியவ்வூர்ப் பொதுமின்னருட், சூதுறழுங்கொங்கைநல்லார்களிற்றனித்தோரனைவரையுந்தொகுக்கச்சொன்னான். (௰௮)

பருவமடமங்கைநல்லார்பலரையந்தமுனிவரன்கண் பார்க்கச்செய்வித், தொருமகளைக்கொடுக்கமன்னனுன்னுமுன்னமுயிர்த்தொகையினுள்ளந்தோறு, மருவுமவனவரவர்க்குந்தக்கவனாத்தனித்தனிபோய்மாடைநல்கி, யிருவருமாயமளிமிசையத்தெருவின்மனைதோறுமிருந்தான்மன்னே. (௰௯)

அவ்விறைவன்றனதருளாற்பெருவிரலிற்பால்சுரக்க வருந்தியுய்ந்த, செவ்வியமாமுனிவனதுசீடர்களிலொருவனிடைச்சேரியிற்றோ, றொவ்வியமங்கையர்பலர்க்குமொவ்வொருவனா விளங்கலுண்மையென்றா, லிவ்விதமாங்கியற்றியதோர்வியனாமென் றியாவர்சொல்வாரிகத்தின்மாதோ. (௨௰)

போயவொற்றர்பலரும்வந்துகணிகையர்தம்மனைதோறும்போரோறன்னார், மேயவிதம்புகலக்கேட்டிகல்வேந்தன்றிடுக்கமுற்றுவேறும்பல்வா, றாயவிதங்கருதியோன்றுநீதியினுக்கிசைந்ததன்றாலகற்றித்தன்றோ, ணேயமுற்றாரிருவர்களிலிளையாடன்னெழிற்பொலிவினினைவுவந்து. (௨௧)

அரண்மனையுட்புகுந்தந்தப்புரத்தேகியவளருகிலணுகியின்றென், விரதபங்கம்வாராமற்காப்பதுன்றன் கடனென்றான்மெல்லிநல்லாள், புரவலநின்னுத்தாரம்போணடக்கையென்விரதம்புகலென்றாளவ், வரமுனிவன்கருத்துமிவன்முயன்றவிதமத்தனையும் வகுத்துச்சொன்னான். (௨௨)

நின்பொருளாமென்றனக்கோர்சுதந்தரமின்றுன்னெறியினிற்பேனென்றா, ளன்பொடுமின்றிரவளவிலம்முனிவன்றனைச்சேரொன்றறைந்தான்சென்றான், மின்பொருசிற்றிடைப்பாவையெள்ளளவுமனங்கோடாவிரதியாகிப், பொன்பொதியுமணிப்பணிபூண்டரங்குமலங்கரித்திருந்தாள்புனையில்பண்பால். (௨௩)

பல்லனாவிற்கனையாகு மருணையுண்ணாமுலையையிடப்பாகம்வைத்த, வல்லவர்தாம்வல்லாளன்மனைவியினைச்சேர்வார்போன்மாறுவேடம், புல்லவரும்பெருங்கொடுமைசகியானொத்தேழுபச்சைப்புரவித்தேரோ, னொல்லவன்றான்மேருவிற்குவடபுறத்தின்மறைந்துவிரைந்தேகினானே. (௨௪)

அருணநெடுங்கிரியாகியரியயன்றேடரிதாயவமலர்தாமற், றொருவன்மனைவியைப்புணர்வாராமாகிலதைப்பிறர்பாலுணர்த்துத்தான்முன், குருமனைவிதனைச்சேர்ந்த

கோதொருவாறெழிப்பதெண்ணிக்கொன்டான்போல
த், திருமலிதண்பனிக்கதிராயிரமுடையமதிகுணக்கு
த்திசையில்வந்தான். (௨௫)

தண்கமலமலர்குவிந்துற்பலமலர்ந்துவண்டுசெலதய
ங்கவானத், தொண்குலவுமுடுத்தோற்றமனைதொறுங்க
ற்றினங்கதறவொழுகுதீம்பால், வண்கொண்மடியசை
த்தாக்கடெருவில்வரச் சிறுவரசைவாய்ந்த தோளோ
டெண்கிளர்நெஞ்சினராகி யொதுங்கவருமாலையைக்க
ண்டிகல்வேன்மன்னன். (௨௬)

காமவெறிவிஞ்சியுடல்பனிப்பவிதழுலர்ந்து செம்மை
கடைக்கண்சாரத், தாமதமேனரசனெங்கென்றடிக்கடிகே
ட்டிருந்தகள்வர்தம்மைப்போற்றிப், பாமரர்போற்கை
யில்வெண்ணெயிருக்க நெய்க்காளனுப்பிநொந்தபழுது
தீர்ந்தே, னிம்கிழ்வுற்றெழுந்தருளென் றழைத்துவந்த
வ்வரங்கதனுண்ணெறியோடியத்து. (௨௭)

அணங்கனையாடனைநோக்கியிவர்க்கானபணிமுழுது
மன்பிற்செய்து, பிணங்கலின்றியின்பாலம்பெருக்கென்
றனதற்குளவர்பெயர்தியென்றார், கணந்தறுகாதப்புற
த்திற்கவடைத்துப்போய்த்தனதுகைவாளேந்தி, மண
ங்கமழ்மாலிகைத்திண்டோள் வல்லாளன் காத்திருந்தா
ன்மகிழ்ச்சிகூர்ந்து. (௨௮)

மலர்விரித்தபஞ்சணையில்வீற்றிருந்தகிழமுனிவர்ம
ருவுவாரொன், றிலகுபசுந்தோகையன்னாளறைக்கதவி
ன்புறத்தாளிட்டெண்ணிலாத, பலதரஞ்சேர்ந்துள்ளா
ள்போன்முகமலர்ச்சியுடனணுகிப்பக்கத்துற்றாள், கல
கமதற்கஞ்சினர்போன்றிருந்ததுபோய் வெயர்த்தலசங்
காட்டலுற்றார். (௨௯)

ஒருநொடிக்கோர்விதநோய்கொண்டுழல்வாரிற்பரத
வித்தாரொள்வேற்கண்ணா, ளருவருப்போர்சிறிதுமின்
றியாதரித்தாள்விரதமுடிவாகாவாற்றா, லுருகியங்கை
விரலைநெரித்தயர்ந்தாளக்கணஞ்சேவ லொலிகேட்டெ
ன்றாழ், வருமெனத்தேர்ந்தணிமுலைச்சோடவர்மார்பிற்
றினைப்புறப்போய்வலிதிற்றேய்ந்தாள். (௩௰)

தழுவுகலுமுன்னாளோர்கொடியிடமூன்றுருக்காட்
டுந்தம்பிரானை, ரழுமதலையுருவானரவளுமுலைப்பால்சு
ரந்தீன்றவளேபோன்று, விழுமியசீர்க்கதவுதிறந்தாளு
டனவ்வேந்துவகைவியப்போடெய்திப், பழுதிலளாமு
தன்மனைவியொடுதானுமெடுத்தணைத்துட்பரிவுதீர்ந்து.*

மூவர்களுமடிக்கடிகைம்மாறிமுகந்தார்கடிகைமுன்
றேமுக்கா, லாவதன்முன்னகிலமுண்டோனறிவரியது
ணைத்தாளுமலர்க்கஞ்சப், பூவருவான் கண்டறியாப்

பொன்முடியும்பார்த்துரியபுனைதீர்ந்துய்ந்தார்,தேவர்பி
ரான்சிசுவடிவங்காணவருவான்போலத்திகழ்ந்தான்வெ
ய்யோன். (௬௨)

மந்திரியாதியர்தாமுந்திருவருணையூரின்மற்றும்வாழ்
சில்லோரும், வந்திறைவனருட்கூத்தென்றுணராமற்ப
லவாறுமகிழ்ந்துசொன்னார்,முந்திவந்தகிழமுனிவனெ
ங்கெனக்கேட்டிலரவளுமொழிந்திலாளெத், தந்திரமு
ந்தெரியுமந்தக் குழவியவர் மனவாஞ்சை தழையச்செ
ய்து. (௬௩)

வேறு.

மாயமின்னெனவிண்ணிடைமறைந்ததுமறைந்து *
போயபோதவர்வருந்துமுன்போர்விடைப்பரியிற் *
றூயவாணகைச்சுரிகுழற்றோகையோர்பாக *
மேயசீர்முதற்றெரிதரவிளங்கியதன்றே. (௬௪)

வானுளாரனைவருமிகமலர்மழைபொழிந்தார் *
கோனுமங்குளகுழுவுடனுவகைமேற்கொண்டு *
மானுறுங்கரத்தண்ணலைத்துதியொடுவணங்கி *
யானுமென்குலத்தியாவருமுய்ந்தனமென்றான். (௬௫)

பொன்றுதீமையில்புனிதர்தாம்புரவலன்றன்பா *
னன்றுநின்றவமகிழ்ந்தனமையுறேனுமே *

யின்றுநின்மகவாயினம்வேண்டுமோறெழிற்சே *
யொன்றுநல்கினும்வருடநாறுயபின்னொழியும். (௬௬)

உலகமுள்ளமட்டுன்மகவென்றெமையுரைக்கத் *
திலமளாவியநீரிறைக்குதுமினித்தேகம் *
விலகுமாறெவண்வேண்டுதியுரையெனவினவக் *
குலவுபோரிடைவிடுத்தலேநலமெனக்குறித்தேன். ௬௭

என்றுகூறினனீந்தனமென்றவரிருவ *
ரன்றுதேடியவரையினுள்ளுருக்கரந்தகன்றார் *
மென்றுகிற்பிடிநிகர்மனைவியொடும்வேந்த *
னின்றுபெற்றபேறென்னெனவியந்தினிதிருந்தான். *

தன்னையாண்டவரிலிங்கமாவுருக்கொடுதங்கு, முன்னை
யாலயத்தினைவளைந்தொருமதின்முடிப்பித், தென்னை
வேண்டுபொற்சிகரிகீழ்த்திசையிலொன்றியற்றிப், பின்
னைமூன்றுமற்றுளதிசைதொறுமுறப்பேணி. (௬௯)

குணக்கிலுள்ளபொற்கோபுரமுகப்பினிற்கோதின் *
மணக்கடாமுமிழ்வாரணமுகவனைவஞ்சர் *
நிணக்குழம்பணிநெடியவேற்குமரனைநிறுவிப் *
பிணக்கொரெள்ளளவின்றிநன்னெறியெலாம்பெருக்கி. *

வாழுநாளையின்மகிமைசால்கயிலையின்மருவுந் *
தாழும்வார்சடைத்தம்பிரானருண்மலிதகையா *

லாழுமெய்புணர்வுடையவல்லாளனையன்றோன் *
வீழும்வாழ்வளித்தருகில்வைத்துவப்புறவிழைந்தார். *

அன்னபாங்கினையறப்பெருந்தேவதையறிவும் *
றுன்னருந்திறலொட்டர்தங்கோனிடத்தொன்றிச் *
சின்னமிக்குறுமவன்படைப்பெருக்கறச்சீறி *
யின்னவாறெனவிரித்திடற்கரியபோரியற்றி. (௪௨)

மகரராசியிற்சூரியன்றோய்தருமதியி *
னிகரில்பூசநாளவனுடற்சுமையறநீக்கி [ற்
யிகல்செய்வீரர்தஞ்சுவர்க்கவாழ்வினைத்தையு மிமைப்பி
ககனமேவழியெனக்கொடுவிவரமாக்காட்டி. (௪௩)

இந்திரன்றழலாதியரொண்மரும்பிறரு *
நந்தியம்பெருமான்மொழிநவின்றிடப்பெற்று *
வந்திறைஞ்சிடக்கயிலைமால்வரைமிசைவயங்குந் *
தந்தியீருரியான்றிருமுன்பிலுய்த்ததரோ. (௪௪)

களத்தின்மன்னவன்மடிந்திடல்கேட்டவன்காத *
லுளத்திலுள்ளவரிருவருமுடல்விடுத்ததனால் *
வளத்ததாகுமவ்வரையில்வந்தவனுடன்வாய்ந்தா *
ரளப்பிலார்வமுற்றவரொருமுவருமங்கு. (௪௫)

கமலைகோன்மலர்க்கண்ணணிகழறெழக்கண்டு *
விமலர்தந்தையுந்தாயருமாமெனவெஃகி *

யமராதியரறியவப்போழ்துநன்கறைந்து *
தமதுபாங்கரிலிடமமைத்தருளினர்தயையால். (௪௬)

அன்றுதொட்டருணபுரியூரவரன்றோன் *
பொன்றுநாள்வரிலீசனையவன்மருபுதல்வ *
னென்றுசொற்றதற்கியைந்தநற்றிருவிழாவியற்றிக் *
குன்றுறழ்ந்தபொற்சிகரியிற்குலவிளக்கிடுவார். (௪௭)

அந்தமன்னவன்றவமெலாந்திரண்டுருவாகி *
வந்தகீழ்த்திசைக்கோபுரவாயிலின்வடபாற் *
கந்தவேள்பெருங்கருணையினலொருகவினுன் *
சந்தமாரிபெய்முகிலெனத்தோன்றியதகையால். (௪௮)

அதனிலொன்றியபெரும்புகழளப்பருமனந்த *
மிதனிலோதியகதைகளுமஃதலாவில்லை *
புதனைநேர்கவிப்புலவர்பற்பலர் துதிபுனைந்து *
முதனைவென்றசெல்வேளரங்கினத்தொடுவயங்கும். ௪௯

செச்சைசூழ்தளங்கடம்பணிபுயத்தொருசேய்தன் *
பச்சையஞ்சுகமுய்ந்தமைவினவலாற்படிறே *
னிச்சைகொண்டதக்கோபுரமாதலினியற்றுங் *
கச்சைசூழ்மணிக்காவலன்புகழ்கழறினனே. (௫௰)

முன்னைநாட்புகழ்த்தொகுதியிற்சிறிதிவன்மொழிந்தே
ன், பின்னையுள்ளனமுடிந்திலவாதலிற்பேசே,னென்னை
யும்பொருளாமெனக்கொண்டதவ்வியல்பு, தன்னையார்
சொலப்புரியுமோயான்செயுந்தவமே. (௫௧)

வேறு.

சந்தக்கவிகள்.

கருணையில்கொடியவர்மனையினுமலைவுறு கவலைப்பா
ழ்வினைநோய், மருவியகவிஞர்களணுகினுமவருளமகி
ழச்சீர்தருமான், முருகவிழிதழிபுமதியமுமணிசடை
முதல்வெற்பாகியதா, லருள்வளமொடுபொருள்வள
மலிதருதிருவருணைக்கோபுரமே. (௫௨)

நாரணனுன்முகனுதியர்வீழ்பத நளினத்தார்மகிழ்கூர்
வாரணமாமுகன்வேலணிதோளினன் வளர்தற்கோரிட
மா, மாரணநோயொடுசூழ்பவமாறிடும்வழியிற்போமவ
ரா, லாரணமாகமமோவிடுசீர்திக ழருணைக்கோபுரமே.

சித்தத்துத்தமபத்திப்பொற்புறு திறல்பெற்றுசிலரா
முத்தர்க்குச்சகசத்திற்சொற்பொருண் முழுதிட்டாள்
வதுவே, மத்தப்புட்பமுடிச்சித்தற்குளமகிழ்பொற்பா
ர்தனிவே, லத்தத்துக்குக்ளிச்சைக்குட்படு மருணைக்
கோபுரமே. (௫௪)

சந்தமுதிர்ந்தசெழுந்தமிழின்சுவைதனினட்பார்புல
வோர், கந்தனையஞ்சுகமொன்றினுடன்றுதி கழறற்கோ
ர்துணையே, சிந்தமுனிந்துநெடுங்கிரியின்புடைதிரிதற்
றீரரசோ, டந்தரர்வந்துபுகழ்ந்துதினந்தொழுமருணை
க்கோபுரமே. (௫௫)

மான்றனைக்கையிலேந்துசிற்பரர் மகிழ் கற்பாருமை
யா, வீன்றபுத்திரர்வாழ்ந்திடத்தகுமிருபொற்கோயில
தே, யேன்றபத்தியின்மூண்டுமுத்தமிழியல்பைத்தேறு
நர்பா, லான்றசித்திகள்வாய்ந்திடச்செயு மருணைக்கோ
புரமே. (௫௬)

நீக்கமின்றியவேற்றுரந்தர னெறியைப்பேணுதலே,
மோக்கமென்றுணர் தீர்க்கநெஞ்சுறு முனிவர்க்காதர
மே, பாக்களஞ்சியமாத்திகழ்ந்திடுபலர்சொற்சூடுதலா
லாக்கமிஞ்சிய கீர்த்திகொண்டொளி ரருணைக்கோபுர
மே. (௫௭)

பன்னகர்வாணருமுன்னிமுறைளுளபழுதற்றுகமதால்,
சொன்னமெய்வீடுறுசெம்மலையோடொருதுணையிற்கா
ணுமதே, கன்னல்வில்வேடனதன்னனுநீடியகருணை
த்தாதையுமா, மன்னமுமேனமுமுன்னமராடியவருணை
க்கோபுரமே. (௫௮)

பையரவேங்கரல்குன்றினூர்மயல்படரத்தாழ்பவரா, வையகமீதுழல்பொய்யனாயாளவும்வருநற்றேவினதே, மெய்யறிவால்வினைகொய்தொருசாருசெய் வியனைப்பேசுநர்மே, லையமுருவருள்செய்திடநீடியவருணைக்கோபுரமே. (௫௯)

முகில்பொதிசீர்கொடுமகபதியாயணிமுதிர்சொற்பாடல்களா, லெகினனுமாய்மலர்மகளுறலாலரியினையொப்பாகிடுமா, மகிமிசையாடிடுமெயிலிவர்சேவகனருள்பெற்றோர்புடையா, லகிலமெலாநுவல்பெருமையதாகியவருணைக்கோபுரமே. (௬௰)

பொக்கமிலன்புபெருக்கியதொண்டர்கள்புதுமைச்சீர்பெறலா, லிக்கணியுங்கைம்தப்பயல்கும்பிடுமியல்பிற்காமுழையே, தக்கன்மகஞ்சிதையக்குதிகொண்டொருதருமப்பேதையைவா, ளக்கரவம்புனைசித்தன்மணஞ்செயுமருணைக்கோபுரமே. (௬௧)

வேண்டன்முற்றருள்வாழ்க்கையென்றுணர்விரதத்தோருறவா,னீண்டகொற்றவைவேற்றொழுஞ்சிலர்நினைவிற்றேய்வதுவே, தாண்டணிச்சிகிமேற்கொளுஞ்சிறுசரணச்சேய்புகழா, லாண்டலைக்கொடிமாட்சிதங்கியவருணைக்கோபுரமே. (௬௨)

வண்ணச்செய்யுளுநண்ணிச்சொல்பவர்வயிரப்பாறையைநே, ரெண்ணப்புல்லர்கண் முன்னுற்றொல்கிடு மிழிவைச்சாடுமதே, மண்ணைக்கெல்லியும்விண்ணிற்றுள்ளியுமதமற்றுருணரா, வண்ணற்கைதொழும்வண்மைச்செல்வர்தமருணைக்கோபுரமே. (௬௩)

கோபுரத்துச்சருக்கமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

வாழி.

பார்வாழிவானுலகும்பிலமும்வாழிபருப்பதங்கள்வாழியவைபலவுங்கொள்வான், பேர்வாழிமாதவத்துப்பெரியோர்வாழி பிறங்குதமிழ்ப்புலமைநலம்பெற்றோர்வாழி, யூர்வாழியருணைநெடுஞ்சிகரிவாழியுயரருணகிரிநாதனுரைக்கும்பாடற்,சீர்வாழிகவுமாரசமையமவாழிதிருநீறுங்கண்டிகையுந்தினமும்வாழி.

அருணகிரிநாதசுவாமிகள்புராணம் முற்றிற்று.

நேரிசைவெண்பா.

பத்திநெறிப்படிநான்பாடுமிந்தக்காவியத்தைச்
சத்தியமாச்செவ்வேள்சரியென்றான், புத்தியுள்ளீ
ரையமுறவேண்டாமருணகிரிநாதனன்பால்
மெய்யடிமையாகிமகிழ்வீர்.....................

தெய்வமேதுணை.

அருணகிரிநாதசுவாமிகள்புராணத்தின்

செய்யுட்டொகைவிபரம்.

பொதுப்பாயிரம்பாட்டு	௬
சிறப்புப்பாயிரம்	௰௪
ஷ சாத்துகவிகள்	௰௩
பூர்வபுண்ணியச்சருக்கம்	௬௫
திருவவதாரச்சருக்கம்	௪௭
மாயாவிநோதச்சருக்கம்	௩௯
அருட்பேற்றுச்சருக்கம்	௪௨
வில்லிபுத்தூராழ்வார்கலகச்சருக்கம்	௪௧
சம்பந்தாண்டான்விகாதச்சருக்கம்	௫௯
பாரிசாதச்சருக்கம்	௩௬
கிளிவாழ்க்கைச்சருக்கம்	௨௭
கோபுரத்துச்சருக்கம்	௬௩
வாழிவிருத்தம்	௧
நேரிசைவெண்பா	௧

ஆகக்கவி—௪௱௫௰௪.

இப்புத்தகம்வேண்டியவர்கள் திருநெல்வேலி வடக் கஜவரததானவிநாயகர் கோவிற்றெருவிற் சித்திரபுத் திரபிள்ளையவர்களிடத்தில் விலைகொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.